சின்னக்குட்டியின் ஜெபம்

சிறுவருக்கான 31 ஜெபங்கள்

எச்.பி.ராஜ்குமார்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வழிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

சின்னக்குட்டியின்

ஜெபம்

சிறுவருக்கான 31 ஜெபங்கள்

(வேத வாசிப்பு, மனப்பாட வசனம் இவற்றுடன்)

அன்புள்ள,

. . . .

எனது கிறிஸ்மஸ் / புத்தாண்டு / பிறந்தநாள் /

. . . . அன்புப் பரிசாக

இந்த நூலைப் பெற்று மகிழ்வாயாக!

தேவன்தாமே உன்னை ஆசீர்வதிப்பாராக!

. . . .

. . . .

No: 21

சின்னக்குட்டியின்

ஜெபம்

சிறுவருக்கான 31 ஜெபங்கள்

(வேத வாசிப்பு, மனப்பாட வசனம் இவற்றுடன்)

எச். பி. ராஜ்குமார்

புத்தக நிலையம்
TVM
627002
பாளையங்கோட்டை

குட்டிப்புலி வெளியீடு

H. B. RAJKUMAR
30, 12th Street,
Padi Pudu Nagar,
Anna Nagar West,
MADRAS – 600 101

குட்டிப்புலி வெளியீடு – 14
புனிதா ராஜ்குமார் நினைவு வெளியீடு – 72
எச்.பி. ராஜ்குமார் நூல்வரிசை – 35 (58)

© H.B. RAJKUMAR

First Published, December 1990
This Edition, December 1995

Cover illustration by **Solomon**

சின்னக்குட்டியின் ஜெபம்

சிறுவருக்கான 31 ஜெபங்கள்

அண்ணனின் கடிதம்
(ஜெபம் என்றால் என்ன? ஜெபத்தின் வகைகள், ஏன் ஜெபிக்க வேண்டும்?, எப்படி ஜெபிக்க வேண்டும்?, தனி ஜெபம்) ... 5
1. ஆண்டவரைத் துதிக்கும் ஜெபம் ... 15
2. ஆண்டவருக்கு நன்றி கூறும் ஜெபம் ... 16
3. காலை ஜெபம் ... 18
4. இரவு ஜெபம் ... 19
5. வேத வாசிப்புக்கு முன் செய்ய வேண்டிய ஜெபம் ... 21
6. படிப்புக்காக வேண்டும் ஜெபம் ... 23
7. விளையாடும்போது செய்யவேண்டிய ஜெபம் ... 25
8. உணவுக்கு முன் செய்ய வேண்டிய ஜெபம் ... 26
9. நல்ல நண்பர்களுக்காக வேண்டும் ஜெபம் ... 27
10. விரோதம்பண்ணுபவர்களுக்காகச் செய்ய வேண்டிய ஜெபம் ... 30
11. ஆலயத்துக்குப் போகும்போது செய்ய வேண்டிய ஜெபம் ... 32
12. ஓய்வுநாள் பள்ளிக்காக ஜெபம் ... 34
13. தாலந்துகளுக்காக வேண்டும் ஜெபம் ... 36
14. பெற்றோருக்காக வேண்டும் ஜெபம் ... 37
15. பயணம் புறப்படுவதற்கு முன்பு செய்ய வேண்டிய ஜெபம் ... 40
16. சுகமின்றி இருக்கும்போது செய்யவேண்டிய ஜெபம் ... 41
17. சோதனைகள் வரும்போது செய்யவேண்டிய ஜெபம் ... 43
18. கவலைப்படும்போது செய்யவேண்டிய ஜெபம் ... 45

19. இரட்சிப்புக்காக வேண்டும் ஜெபம் ... 47
20. ஆண்டவருக்குக் கீழ்ப்படிய உதவும்படி ஜெபம் ... 49
21. ஆண்டவருடைய வழிநடத்துதலை வேண்டும் ஜெபம் ... 51
22. நோய்வாய்ப்பட்டிருக்கும் மற்றவர்களுக்காக ஜெபம் ... 52
23. மற்றவர்களிடம் கருணை காட்ட உதவும்படி ஜெபம் ... 54
24. பாதுகாப்பை வேண்டும் ஜெபம் ... 56
25. மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிக்கூற உதவும்படி வேண்டும் ஜெபம் ... 58
26. தேவைகளுக்காக வேண்டும் ஜெபம் ... 60
27. புத்தாண்டு ஜெபம் ... 61
28. பெரிய வெள்ளி ஜெபம் ... 63
29. ஈஸ்டர் ஜெபம் ... 64
30. கிறிஸ்மஸ் ஜெபம் ... 65
31. பிறந்தநாள் ஜெபம் ... 67

ஒவ்வொரு ஜெபமும் பொருத்தமான வேத வாசிப்புப் பகுதி மற்றும் மனப்பாட வசனத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. வேதத்தை வாசித்து, வசனத்தை மனப்பாடம் செய்து பின்னர் ஜெபிப்பது நல்ல பழக்கம். சிறுவருக்காக மட்டுமின்றி இளம் வாலிபர் மற்றும் வாலிபருக்கான ஜெபங்களும் கொடுக்கப் பட்டுள்ளன. சிறுவர்கள் அவற்றைப் பயன்படுத்தும்போது தேவையான பத்திகளை மட்டும் தெரிந்தெடுத்து ஜெபிக்கலாம். ஒரே வேளையில் ஜெபத்தை மனப்பாடம் செய்ய முயலுவதை விட, திரும்பத் திரும்பச் செய்யும்போது மனப்பாடம் செய்வது எளிதாக இருக்கும்.

* என்ற குறியிடப்பட்ட இடங்களில் தங்கள் குறிப்பிட்ட தேவைகளை விவரமாகக் கூறி ஜெபிக்கலாம்.

அண்ணன் கடிதம்

அன்புத் தம்பி தங்கைகளே!

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்" (பிலிப்பியர் 4:6, 7) என்று வேதாகமம் கூறுகிறது.

இந்த ஜெபத்தைப் பற்றிய வேதாகம சத்தியங்களை இப்பொழுது நான் உங்களுக்கு எடுத்துக்கூறப் போகிறேன்.

ஜெபம் என்பது நம்மைப் படைத்து, காத்து, வழி நடத்திவரும் ஆண்டவரோடு உரையாடுவதே! நாம் நமது அப்பாவிடமோ, அம்மாவிடமோ பேசுவதுபோல் நமது பரம பிதாவாகிய ஆண்டவரிடம் பேசுகிறோம்!

நீங்கள் ஏதாவது தவறு செய்திருந்தால் உங்கள் அப்பாவோடு பேசவே பயப்படுகிறீர்கள் அல்லவா? அவரைக் கண்டால் ஒளிந்துகொள்ள எண்ணுகிறீர்கள்! நமது பாவங்களும் நம்மை ஆண்டவருடைய முன்னிலையிலிருந்து ஓடி ஒளிந்து கொள்ளச் செய்கின்றன! இப்படியிருக்கும்போது அவரோடு பேசுவது எப்படி?

மற்றொன்றையும் மறந்துவிடக் கூடாது! நாம் நமது சொந்த அப்பாவிடம் மட்டுமே எதையாவது கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியும்! மற்றவர்களின் அப்பாவிடம் கேட்டால் ஒன்றுமே கிடைக்காது அல்லவா? நாம் ஆண்டவரை நமது சொந்த அப்பாவாக ஏற்றுக்கொண்டிருக்கிறோமா? அவர் நம்மைத் தமது சொந்தப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டிருக்கிறாரா?

ஜெபிக்கத் தகுதி

நாம் நமது பாவங்களை, தவறுகளை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு, அவற்றை விட்டிருக்கிறோமா? கிறிஸ்து நமக்காக, நமது பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்தார் என்பதை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டு இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறோமா?

கிறிஸ்துவை நமது மீட்பராக ஏற்றுக்கொண்டிருந்தால் தான் பயமின்றி ஆண்டவரோடு பேச முடியும்! அவரும் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டு நமது வேண்டுதல் களுக்குச் செவிசாய்ப்பார்! "நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று" (2 கொரி. 6:18) தேவன் நம்மைப் பார்த்துச் சொல்லியிருக்கிறாரா?

ஜெபத்தின் மேன்மை

ஜெபம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பார்ப்போமா? இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளைகள் ஜெபித்தார்கள். சாமுவேல் தனது ஆதரவில் உள்ளவர்களுக்காக ஜெபிக்காமல் இருப்பதை ஒரு பாவமாகவே கருதினார் (1 சாமு. 12:23). இடைவிடாமல் ஜெபம் பண்ணுவது கிறிஸ்தவர்களின் கடமை என்று பவுல் அப்போஸ்தலன் வலியுறுத்தினார் (கொலோ. 4:2).

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு ஜெப வீரராகத் திகழ்ந்தார். வனாந்தரத்தில் தன்னைச் சோதனைக்கு ஒப்புக்கொடுப்பதற்கு முன்பாக உபவாசமிருந்து ஜெபித்தார். பன்னிரு சீடர்களைத் தெரிந்து கொள்வதற்கு முதல் நாள் இரவு முழுவதும் ஜெபித்தார் (லூக்கா 6:12, 13). யூதாசினால் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முன்பு இரத்தம் வியர்வையாகச் சிந்த ஜெபித்தார் (லூக்கா 22:42–44). சிலுவையில் அவர் அருளிய ஏழு வார்த்தைகளில் "பிதாவே, உம்முடைய கைகளில் என்

ஆவியை ஒப்புவிக்கிறேன்" (லூக்கா 23:46) என்ற ஜெபமும் ஒன்றாகும்!

இப்போது ஜெபத்தின் வகைகளைப் பார்ப்போமா?

நமக்காக வேண்டுதல்

"அப்பா எனக்கு ஒரு நோட்டு வேண்டும்" என்று நமது அப்பாவிடம் நமது தேவைகளைக் கேட்கிறோமல்லவா? அதுபோல ஆண்டவரிடம் நமது தேவைகளுக்காக, உடல் நலத்துக்காக, படிப்புக்காக அவருடைய வழிநடத்துதலை வேண்டி ஜெபிக்க வேண்டும் (பிலி. 4:6). நமக்கு உண்மையிலேயே நோட்டு தேவையாயிருந்தால், எப்போது தேவையோ அப்போது அப்பா வாங்கிக் கொடுப்பதுபோல, ஆண்டவரும் நமது ஜெபங்களுக்குப் பதிலளிப்பார்.

பிறருக்காக வேண்டுதல்

"அப்பா, தம்பிக்கு மிட்டாய் வேண்டுமாம்—" என்று நாம் சில வேளைகளில் நமது தம்பிக்காக அப்பாவிடம் கேட்கிறோமல்லவா? அது போல, துயரப்படும் மற்றவர் களுக்காக ஆண்டவரிடம் ஜெபம் செய்ய வேண்டும்.

நமது பள்ளியில் உடன் பயிலுபவர்களுக்காக, உடல் நலமில்லாமல் இருப்பவர் களுக்காக, நமது ஆலயத்துக் காக, ஆண்டவருடைய ஊழியர்களுக்காக ஜெபிக்க மறக்கக் கூடாது! "எல்லா மனுஷருக்காகவும் விண்ணப் பங்களையும் ஜெபங்களையும்

வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும்" (1 தீமோ. 2:1) என்று வேதாகமம் கூறுகிறது.

நாம் நமக்குத் தீங்கிழைத்தவர்களுக்காகவும், நம்மோடு சண்டை போட்டுக் கொண்டிருக்கும் உடன் மாணவர்களுக் காகவும் ஜெபிக்க வேண்டும். "உங்களை நிந்திக்கிறவர் களுக்காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரரா யிருப்பீர்கள்" (மத். 5:44, 45). கிறிஸ்து தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று ஜெபித்ததை மறந்துவிடாதீர்கள்.

நன்றி சொல்ல வேண்டும்

நாம் எதையாவது பெற்றுக் கொள்ளும்போது, நன்றி கூற வேண்டும் என்று நமது பெற்றோர் கற்றுக் கொடுத் திருக்கிறார்கள் அல்லவா? அப்படியானால் நமக்கு சுகத்தையும் பலத்தையும் அளித்து, நம்மைக் கண்மணிபோலக் காத்துவரும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதை மறக்கலாமா? ஜெபம் என்பது கேட்டுப் பெறுவது மட்டுமல்ல, கிடைத்த வற்றுக்காக நன்றி கூறுவதும்தான்! "ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தையே" வேதாகமம் வலியுறுத்துகிறது (பிலி. 4:6).

"எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெச. 5:18) என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார்.

மன்னிப்பை வேண்டும் ஜெபம்

"அப்பா நான் தம்பியை அடித்தது தப்புப்பா, என்னை மன்னிச்சுடுங்க—" என்று நாம் எத்தனை முறை நமது அப்பாவிடம் மன்னிப்புக் கேட்டிருக்கிறோம். நாம் நமது பாவங்களை அறிக்கையிட்டு, அவற்றை விட்டுவிட்டு

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் மட்டுமே பாவத்திலிருந்து விடுதலை பெற்று, மோட்ச பாக்கியத்தைப் பெற முடியும்! எனவே ஜெபங்களில் முக்கியமானது பாவ அறிக்கை ஜெபமாகும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவரா யிருக்கிறார்" (1 யோவான் 1:9).

தேவனை நேசித்துத் துதித்தல்

நாம் நமது பெற்றோரிடமும், நண்பர்களிடமும் அன்பு செலுத்துகிறோமல்லவா? அப்படியானால் ஆண்டவரையும் நேசிக்க வேண்டியது அவசியமல்லவா? நாம் அவரைத் துதித்துப் பாடும்போது, துதி ஜெபங்களை ஏறெடுக்கும்போது அவரை நேசிப்பதை வெளிப்படுத்துகிறோம்.

"பிள்ளைகளே, கர்த்தரைத் துதியுங்கள்" (சங். 148:12) என்றும் "கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது" (சங். 118:1) என்றும் வேதாகமம் கூறுகிறது.

ஜெபத்தின் வகைகளை நாம் இதுவரை தெளிவாகப் பார்த்தோம். அடுத்து நாம் ஏன் ஜெபிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போமா?

நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?

கிறிஸ்துவுடனே ஐக்கியமாக இருப்பதற்கு ஜெபம் அவசியம். அவர் நமது சிநேகிதர் (யோவான் 15:15), நமது மேய்ப்பர் (யோவான் 10:14), நமது மீட்பர் (கலா. 3:13), பாவிகளாகிய நமக்காக ஆண்டவரிடம் பரிந்து பேசுகிறவர் (1 யோவான் 2:1). இவ்வாறு நமக்கு எல்லாமுமாக இருந்து நம்மைக் காத்து, இரட்சித்து நடத்திவரும் கிறிஸ்துவோடு நாம் ஐக்கியமாக இருக்க வேண்டுமல்லவா?

இரண்டாவதாக, நாம் பலவீனமானவர்கள். ஆண்டவர் அளிக்கும் பெலனைப் பெறுவதற்காக ஜெபிக்க வேண்டும்.

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான். மாம்சமோ, பலவீனமுள்ளது" (மத். 26:41) என்றார் இயேசு. நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமான நேரத்தை ஜெபத்தில் செலவிடுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு பலத்தையும், சக்தியையும், சமாதானத்தையும், ஞானத்தையும், பொறுமையையும், மகிழ்ச்சியையும் பெறலாம்!

மூன்றாவதாக வேதாகமம் நாம் ஜெபிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஆண்டவர்மீது அன்பு செலுத்தும் நாம் அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும் (யோவான் 14:21) அல்லவா? "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச. 5:17) என்று வேதாகமம் தெளிவாகக் கட்டளையிட்டிருக்கிறது.

அடுத்தபடியாக நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் என்பதைப் பார்ப்போமா?

எப்படி ஜெபிக்க வேண்டும்?

நமது ஆண்டவர் எங்கும் நிறைந்து காணப்படுபவர். எனவே நமக்குத் தேவை ஏற்படும்போதெல்லாம் அவரை நோக்கி ஜெபிக்கலாம். "நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம் வாருங்கள்" (சங். 95:6) என்று வேதாகமம் கூறுகிறது. கூடிய மட்டும் முழங்காற்படியிட்டு ஜெபிப்பது நமது பணிவைக் காட்டுகிறது. அப்படி முடியாத இடங்களில் தலை குனிந்து

கண்களை மூடி ஜெபிக்க வேண்டும். தேர்வறையில் தேர்வு எழுதத் துவங்கும்போது மௌனமாக ஜெபித்து எழுதத் துவங்க வேண்டும். ஓட்டப்பந்தயத்தைத் துவங்கும்போது வெற்றிக்காக கண்மூடி ஜெபிக்கலாம். ஒவ்வொரு செயலையும் துவங்கும்போது ஜெபத்தோடு ஆரம்பிக்கும் பழக்கத்தைக் கைக்கொள்ளுங்கள். ஏதேனும் பிரச்சினை வரும்போது, உடன்தானே ஆண்டவருடைய வழிநடத்துதலைப் பெறும்படி மனதுக்குள் ஜெபியுங்கள்!

மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காக அடுக்கடுக்கான வார்த்தைகளைக் கொண்ட நீண்ட ஜெபம் செய்வது எந்தவிதமான பலனையும் தராது என்று வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது. ஜெபம் என்பது நமது அப்பாவோடு பேசுவதுதானே? அதில் வார்த்தை அழகு தேவையில்லையே! நமது உள்ளத்தைக் காணக்கூடிய ஆண்டவர் நாம் எந்த உணர்வோடு ஜெபிக்கிறோம் என்பதையே கண்டு அதற்கேற்றபடி பலனளிக்கிறார்!

எந்த உணர்வோடு ஜெபிக்க வேண்டும்?

முதலாவதாக நாம் தாழ்மை உணர்வோடு ஜெபிக்க வேண்டும். நாம் நமது ஆசிரியரிடமோ, தலைமையாசிரியரிடமோ பேசும்போது எவ்வளவு பணிவோடு பேசுகிறோம்! அப்படியானால் சர்வ வல்லமை படைத்த ஆண்டவரோடு பேசும்போது எவ்வளவு தாழ்மையாகப் பேச வேண்டும்! அங்கே தற்பெருமைக்கு இடமே இல்லை!

லூக்கா 18:10–14 வசனங்களை வாசித்துப் பாருங்கள். அங்கே தேவாலயத்துக்கு ஜெபிக்கச் சென்ற பரிசேயன், ஆயக்காரன் இருவரிலும் தாழ்மையோடு ஜெபித்த ஆயக்காரனின் ஜெபமே கேட்கப்பட்டது. "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்றார் இயேசு (லூக்கா 18:14).

இரண்டாவதாக, விசுவாச உணர்வோடு ஜெபிக்க வேண்டும். நாம் கேட்டுக்கொள்ளும் ஆண்டவர் சகலத்தையும் செய்து முடிக்கக்கூடிய வல்லமையுடையவர். அப்படி யிருக்கும்போது நாம் கேட்பதைப் பெறுவோம் என்ற விசுவாசத்தோடு ஏன் ஜெபிக்கக்கூடாது? "நீங்கள் விசுவாச முள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்" என்று இயேசு வாக்குத் தத்தம் (மத். 21:22) அருளியிருக்கிறாரே!

மூன்றாவதாக ஊக்க உணர்வோடு உற்சாகத்துடன் ஜெபிக்க வேண்டும். ஜெபம் செய்வதில் தளர்ந்து போய்விடக் கூடாது! தொடர்ந்து செய்த ஜெபத்தினால் தேவைகள் அனைத்தையும் பெற்று ஜார்ஜ் முல்லர் நூற்றுக்கணக்கான அனாதைப் பிள்ளைகளைக் காப்பாற்றி வந்தார். "இடை விடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (1 தெச. 5:17) என்று வேதாகமம் கூறுகிறது.

நான்காவதாக மன்னிக்கும் உணர்வோடு ஜெபிக்க வேண்டும். நமக்குத் தீங்கிழைத்தவர்களை மன்னிக்காமலும், நமக்கு விரோதமானவர்களோடு சமாதானம் பண்ணாமலும் நாம் ஏறெடுக்கும் ஜெபம் கேட்கப்பட மாட்டாது. மத்தேயு 5:22–24 வசனங்களைப் படித்துப் பாருங்கள்!

ஐந்தாவதாக உள்ளத்தில் பாவ சிந்தனை அற்றவர்களாக ஜெபிக்க வேண்டும். "என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங். 66:18) என்று வேதாகமம் கூறுகிறது. முதலில் நமது பாவங்களை அறிக்கையிட்டுப் பாவ மன்னிப்பைப் பெற்ற பிறகு நாம் ஏறெடுக்கும் ஜெபங்களே கேட்கப்படும்!

தனி ஜெபம்

ஆண்டவரோடு தனிமையில் பேசும் தனி ஜெபம் மிகவும் முக்கியமானது. மத்தேயு 6:6–இல் இயேசு "அந்தரங்கத்தி

லிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு" என்று கூறியுள்ளார். தனி ஜெபத்தில் நாம் படித்த ஐந்து வகை ஜெபங்களையும் பயன்படுத்தலாம்.

வேதாகமத்தில் தனி ஜெபம் செய்தவர்கள்: இயேசு (லூக்கா 22:41–44), யாக்கோபு (ஆதி. 32:9–12), கிதியோன் (நியாயா. 6:36–40), அன்னாள் (1 சாமு. 1:10–12), தாவீது (2 சாமு. 7:18–29), எசேக்கியா (2 இரா. 20:2, 3), ஏசாயா (2 இரா. 20:11), எஸ்றா (எஸ்றா 9:5–15), நெகேமியா (நெகே. 1:4–11), தானியேல் (தானி. 9:3–20), யோனா (யோனா 2:1–10), பேதுரு (அப். 10:9), கொர்நேலியு (அப். 10:30–32). வேதாகமத்தில் இந்த வேத பகுதிகளை ஒவ்வொன்றாக எடுத்துப் படியுங்கள். எந்த வகை ஜெபங்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள். அவற்றை நீங்களும் பின்பற்றுங்கள்.

தினமும் காலையும், மாலையும் வேத வாசிப்புக்குப் பின்னர் ஜெபம் செய்வது நல்லது. வேதாகமத்தை வாசித்து அதன்பின்னர் ஜெபிக்கும்போது நாம் படித்த வேத வசனத்தையும் ஜெபத்தில் பயன்படுத்தலாம். வேதாகமத்திலுள்ள வாக்குத்தத்த வசனங்களை நமது ஜெபத்தில் பயன்படுத்துவது தேவனை மகிமைப்படுத்துகிறது. வேத வசனங்கள் தேவனுடைய சொந்த வார்த்தைகள் அல்லவா ?

நாம் ஜெபிக்கும்போது முக்கியமான ஒன்றை மறந்து விடக் கூடாது. நாம் எதற்காக ஜெபிக்கிறோமோ அதைத் தெளிவான வார்த்தைகளின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்பதை ஆண்டவர் அறிவார். என்றாலும் அது நமது வாயின் வார்த்தைகளால் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்று அவர் விரும்புகிறார்!

ஜெபிக்கும்போது சாத்தானின் சோதனைகள் அதிகமாக இருக்கலாம். என்றாலும் நமது ஆண்டவர் அவைகளை ஜெயிக்க வல்லமை அருளுவார்!

"தினமும் காலையில் நான் இரண்டு மணி நேரமாவது ஜெபிக்காவிட்டால், அன்று முழுவதும் சாத்தான் என்னை ஜெயித்து விடுகிறான்" என்றார் மாட்டின் லூத்தர்.

சாத்தானுக்கு இடம்கொடாமல் ஜெபிப்போம்! ஆண்டவர் அருளும் வல்லமையைப் பெறுவோம்!

அன்பு அண்ணன்,
எச். பி. ராஜ்குமார்

1. ஆண்டவரைத் துதிக்கும் ஜெபம்

எல்லாம் வல்ல ஆண்டவரே,

நீரே சர்வ வல்லவராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும், சர்வ ஞானமும் பொருந்தியவராகவும் இருக்கிறீர். உம்மைத் துதிக்கிறேன்.

நான் என் பாடங்களில் படிப்பதுபோல, கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்கள் முதல், மிகப் பிரமாண்டமான சூரியன், நட்சத்திரங்கள் வரையுள்ள கோடானுகோடி படைப்புக்களை எண்ணி வியப்போடு உம்மைப் போற்றுகிறேன். எண்ணமுடியாத இத்தனை படைப்புக்களும் ஓர் ஒழுங்கோடு இயங்கி வருவது உம்முடைய ஞானத்தைப் பறைசாற்றுகிறது. ஒவ்வொரு படைப்பும் பயனுள்ள வகையில் இயங்கி வருவது இன்னுமதிகமான வியப்போடு என்னைத் துதிக்க வைக்கிறது. இவ்வளவு பிரமாண்டமான, அதிசயமான படைப்புக்களின் நடுவில் என்னையும் ஒரு பொருட்டாக நினைத்து, எனது இரட்சிப்புக்காக உமது ஒரே பேறான குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்த உம்முடைய பேரன்பை நினைத்து கோடானுகோடி துதிகளை உமக்கு ஏறெடுக்கிறேன்.

நல்லோர்மேலும் தீயோர்மீதும் சூரியனை உதிக்கப் பண்ணி, மழையைப் பொழிந்து, அவர்களைப் பராமரிக்கும் உமது மேன்மையான நாமத்தைத் துதிக்கிறேன். உமது பெருந்தன்மையைப் போற்றுகிறேன். வல்லமையினால் அனைவரையும் என்றென்றைக்கும் அரசாண்டு வரும் உம்மைத் தாழ்மையோடு துதிக்கிறேன். மாட்சிமையும், வல்லமையும், மகிமையும், ஜெயமும், மகத்துவமும் உம்முடையவைகளே! வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகளே! நீரே அனைத்துக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்!

உம்முடைய கிருபை என்றென்றும் எங்களை ஆற்றித் தேற்றுகிறது; எங்கள் கண்ணீரைத் துடைக்கிறது; சோதனை

காலங்களிலும், கஷ்ட நேரங்களிலும் எங்களைத் தாங்குகிறது. நீர் நல்லவர் என்று உம்மைப் போற்றித் துதிக்கிறேன்.

கர்த்தரே, உம்முடைய உண்மை என்றென்றைக்குமுள்ளது. உம்முடைய வாக்குத்தத்தங்கள் ஒருநாளும் அழிந்து போவதில்லை. நீர் நேற்றும், இன்றும், என்றும் மாறாத தேவனாக, எனக்கு அடைக்கலமானவராக இருப்பதை நினைத்து உம்மைத் துதிக்கிறேன். என் துதிகளை ஏற்றுக்கொள்ளும் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

மத்தேயு 21:1–16

மனப்பாட வசனம்

கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர்; அவர் கிருபை என்றுமுள்ளது (சங். 118:1).

2. ஆண்டவருக்கு நன்றி கூறும் ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார் என்று வேத வசனம் கூறுவதுபோல இந்நாள்வரையும் உமது கிருபையால் என்னைத் தாங்கி, சகல தேவைகளையும் அளித்து, காப்பாற்றி வருவதற்காக உமக்கு நன்றி தேவனே. என்னுடைய உடல் நலத்துக்காகவும், குடும்பத்திலுள்ள அப்பா, அம்மா மற்றும் அண்ணன் தம்பி எல்லோரையும் நீர் சுகமாய்ப் பாதுகாத்து வருவதற்காகவும் உம்மைத் தோத்தரிக்கிறேன்.

எத்தனையோ பிள்ளைகள் படிக்க வசதியில்லாமல் ஏதாவது தொழில் செய்து கஷ்டப்படுகின்றனர். எனக்கோ நீர் படிக்க வாய்ப்பளித்திருக்கிறீர். அதற்கு நன்றி கூறுகிறேன். நான்

இந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தி, உலகப்பிரகாரமான அறிவோடு உம்மைப் பற்றிய அறிவிலும் வளர்ச்சியடைய முயலுவேன் என்று உறுதி கூறுகிறேன்.

நீர் எங்களிடத்தில் அன்புகூர்ந்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக உம்முடைய குமாரனை அனுப்பினதினாலே நான் உம்மை நன்றியோடு தோத்தரிக்கிறேன். அவரை விசுவாசித்ததின்மூலம் என் பாவங்கள் கழுவப்பட்டு, நானும் உம்முடைய பிள்ளையாகும் பாக்கியத்தை எனக்குக் கொடுத்ததற்காக நன்றி தேவனே. ''சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங் கொடுங்கள்'' என்று கூறி, எங்களுக்கும் இந்த ஆசீர்வாதத்தைக் கொடுத்தீரே! இந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை நானும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள எனக்கு உதவியருளும்.

"நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்'' என்று கூறியதுபோல இன்றும் எங்களுக்காக உம்மிடம் பரிந்துபேசிக் கொண்டிருக்கிற மீட்பர் இயேசுவுக்காக உமக்கு நன்றி, தேவனே. நீர் உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுள்ளவராக எங்களைப் பராமரித்துக் காப்பாற்றி வருவதற்காக, தோத்திரம் ஆண்டவரே!

ஒடுக்கப்படுகிற யாவருக்கும் நீர் நீதியையும் நியாயத்தையும் செய்கிறீர். பரலோகத்தின் பலகணிகளைத் திறந்து உமது பிள்ளைகளை அபரிமிதமாக ஆசீர்வதித்து வருகிறீர். வியாதியால் அவதிப்படுபவர்களையும், துயரத்தில் துடிப்பவர்களையும் நீர் உமது தழும்புகளால் குணமாக்குகிறீர்; அவர்கள் பாரங்களைத் தாங்குகிறீர்; இளைப்பாறுதல் தருகிறீர். இன்னும் எங்களுக்காகச் செய்துவரும் எத்தனையோ மகிமையான காரியங்களுக்காகவும், அளித்துவரும் அநேகமான யோசனைகளுக்காகவும் உம்மை நன்றியறிதலோடு தோத்தரிக்கிறேன், ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

சங்கீதம் 103

மனப்பாட வசனம்

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது (1 தெச. 5:18).

3. காலை ஜெபம்

கண்மணியைப் போலக் காத்துவரும் கர்த்தரே,

இரவு முழுவதும் எந்தவித ஆபத்தும், மோசமுமின்றி என்னைக் காப்பாற்றி, இந்தக் காலையில் உம்மைத் துதிக்கும் துதியோடு எழக் கிருபை செய்ததற்காக உமக்கு நன்றி, ஆண்டவரே. நல்ல உறக்கத்தையும், ஓய்வையும் கொடுத்து புத்துணர்வோடு இன்றைய பணியைத் துவக்கத் துணைபுரிந்த உமக்கு தோத்திரம்.

இன்று நான் எனது கடமைகளைச் சரிவரச் செய்ய எனக்குத் துணையாயிரும். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் கீழ்ப்படிந்து அவர்கள் மனம் கோணாமல் நடந்துகொள்ள வழிகாட்டியருளும். என்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்ய வாய்ப்பருளும். பள்ளியிலும் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைச் சரிவரக் கவனித்துப் புரிந்துகொள்ளும் ஞானத்தை எனக்குக் கொடும்.

பள்ளியிலும் வெளியிலும் உமக்குகந்த பிள்ளையாக ஜீவிக்க எனக்குத் துணையாயிரும். இன்று உம்மைப் பற்றி யாருக்காவது கூறக்கூடிய வாய்ப்பை எனக்குக் கொடுத்தருளும். அந்த வாய்ப்பை நான் சரிவரப் பயன்படுத்தத் தக்க வகையில் வழிகாட்டி நடத்தியருளும், அன்பு ஆண்டவரே!

இன்று போக்கிலும், வரத்திலும் நீரே எனக்குப் பாதுகாப்பாயிரும். எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தின் மூலம் என்னைக் காக்கும்படி அன்பு இரட்சகர் இயேசுவின்மூலம் வேண்டுகிறேன், தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

91–ஆம் சங்கீதம்.

மனப்பாட வசனம்

சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும் (லூக்கா 18:1).

4. இரவு ஜெபம்

எங்களைப் பாதுகாக்கும் தேவனே,

இன்று முழுவதும் எங்களை உமது கிருபையால் பாதுகாத்துக் காப்பாற்றி வந்த ஆண்டவரே, உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

இன்று நான் சில புதிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பளித்த உம்மைத் துதிக்கிறேன். நான் இந்தப் பாடங்களை முழுவதுமாகப் புரிந்துகொண்டு, என் நினைவில் அவற்றை வைத்திருக்க போதிய ஞானத்தை எனக்குக் கொடுத்தருளும்.

இன்று எங்கள் தேவைகளையெல்லாம் சந்தித்து

எங்களைப் போஷித்த உம்மை நன்றியறிதலோடு துதிக்கிறேன். போதிய உணவின்றிப் படுக்கைக்குச் செல்பவர்களையும், வசதியற்ற நிலையில் உறங்கச் செல்பவர்களையும் நினைத்துப் பார்க்கிறேன், சுவாமி. நீரே வானத்தின் பலகணிகளைத் திறந்து அவர்களை ஆசீர்வதித்தருளும். ஜெபிப்பதோடு மட்டுமின்றி, என்னாலியன்ற உதவிகளை நான் அவர்களுக்குச் செய்யக்கூடிய வாய்ப்பையும், வாஞ்சையையும் எனக்கு அளித்தருளும்.

இன்று முழுவதும் நான் உம்முடைய பிள்ளையாக நடக்கும்படி அரவணைத்துக் காத்துக் கொண்டு வந்த உமக்கு தோத்திரம் தேவனே. நான் அறியாமல் செய்த தவறுகள் உண்டானால் அவற்றைத் தயவாய் மன்னித்தருளும். நான் அறிந்தோ அறியாமலோ எவரையேனும் புண்படுத்தியிருந்தால் அதை எனக்கு வெளிப்படுத்தும். என் தவறை உணர்ந்து, மன்னிப்புக்கேட்டு மறுபடியுமாக ஒப்புரவாக உதவும்.

இந்த இரவிலும் எந்தவித நாச, மோசங்களுக்கும் என்னை விலக்கிக் காத்து, சுகமான நித்திரையை அளித்து காலையில் உம்மைத் துதிக்கும் துதியோடு விழித்தெழக் கிருபை செய்தருளும் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

யாக்கோபு (ஆதி. 28:10–22)

மனப்பாட வசனம்

கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். (சங். 34:7).

5. வேதவாசிப்புக்குமுன் செய்யவேண்டிய ஜெபம்

எங்களைப் பராமரித்துக் காப்பாற்றும் தேவனே,

ஆவிக்குரிய உணவாக எங்களுக்கு நீர் அளித்துள்ள வேத வசனங்களுக்காக உம்மை நான் நன்றியறிதலோடு போற்றித் துதிக்கிறேன். வேதாகம நிகழ்ச்சிகள் மூலம் எங்களுக்கு நல்வழி காட்டுவதற்காக உம்மை தோத்தரிக்கிறேன். வேதாகமக் கதைகள் மூலம் நல்ல போதனைகள் அளிப்பதற்காக உமக்கு நன்றி. எங்களுக்கு ஆறுதலளித்து, உற்சாகமூட்டும் வசனங்களுக்காக உமக்கு தோத்திரம் செலுத்துகிறேன்.

வேத வாக்கியங்களெல்லாம் உம்முடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன. நாங்கள் நற்கிரியைகளைச் செய்யத் தகுதியுள்ளவர்களாக இருக்கும்படி அவை எங்களுக்கு வழி காட்டுகின்றன; உபதேசம் செய்கின்றன; கடிந்துகொள்கின்றன; எங்களைச் சீர்திருத்துகின்றன; எங்களுக்கு நீதியைப் போதிக்கின்றன. எனவே நான் உம்முடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அதைத் தியானிக்கும் பழக்கத்தைப் பெற்றுக் கொள்ளும்படி நீரே எனக்கு உதவும். நான் தினமும் ஓர் அமைதியான நேரத்தையும், தனிமையான இடத்தையும் வேத வாசிப்புக்காகத் தெரிந்து

கொள்ளத் துணைபுரியும். ஒழுங்காகவும், முழு மனதோடும் வேத வாசிப்பில் ஈடுபட உதவும்.

"தேவனுடைய வசனத்தைக் கேட்டு, அதின்படி செய்கிறவர்களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரருமா யிருக்கிறார்கள்" என்று நீர் சொல்லியிருக்கிறீரே. வேத வாசிப்பின்மூலம் நான் உமது கட்டளைகளைத் தெரிந்து கொண்டு அவற்றுக்குக் கீழ்ப்படிய நீரே எனக்கு உதவும். உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருந்து என்னைச் சரியான பாதையில் வழி நடத்தும்படி உதவும்.

வேத வாசிப்பின்மூலம் நான் உம்மைப் பற்றிய அறிவிலும், விசுவாசத்திலும் வளர்ச்சியடையத் துணைபுரியும். "விசுவாசம் கேள்வியினாலே வரும். கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்" என்று வசனத்திற்கேற்ப உம்முடைய வசனங்கள் எனது விசுவாசத்தை வளர்ப்பதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

தனது தாயார் மூலமும், பாட்டி மூலமும் வேத வசனங்களை அறிந்த தீமோத்தேயு மற்றவர்களுக்கும் அந்த வசனங்களை எடுத்துக் கூறினார். அதைப்போல நானும் உம்முடைய வசனத்தை மறவாமல் மற்ற மாணவர்களுக்கும் எடுத்துக் கூற உதவும். இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன், தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

தீமோத்தேயு (2 தீமோ. 1:5; 3:14–17)

மனப்பாட வசனம்

உம்முடைய வேதத்தை **நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த** சமாதானமுண்டு; **அவர்களுக்கு இடறலில்லை (சங். 119:165).**

6. படிப்புக்காக வேண்டும் ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

எங்களுக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமான இயேசுவானவரை அளித்து எங்கள்மீது அன்புகாட்டி வரும் உம்மை நான் போற்றித் துதிக்கிறேன்.

"அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தாரும்" என்று உம்மிடம் வேண்டிக்கொண்ட சாலொமோன் இராஜாவுக்கு அளவற்ற ஞானத்தைக் கொடுத்த ஆண்டவரே, உம்மை நான் துதித்து வணங்குகிறேன்.

எனக்குத் தேவையான ஞானத்தையும், அறிவையும் கொடுத்து, நான் நன்றாகப் படிக்க உதவுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். ஆசிரியர் பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும்போது அவற்றைக் கவனித்துப் புரிந்துகொள்ளும் திறனை எனக்குக் கொடும். கணக்குப் பாடங்களை எளிதாகச் செய்யுமளவுக்கு எனக்குத் திறமையையும், அறிவையும் கொடுத்தருளும். மனப்பாடம் செய்வதற்கேற்ற ஞாபக சக்தியை அளித்தருளும். புரிந்துகொள்ளும் வரை திரும்பத் திரும்பப் படிக்கக்கூடிய பொறுமையையும், விடாமுயற்சியையும் கொடுத்தருளும்.

* இதோ, நான் இன்று தேர்வு எழுதச் செல்லுகிறேன், சுவாமி. நான் படித்த பாடங்களை நினைவில் வைத்து ஒழுங்காகப் பதில்களை எழுத உதவி செய்யும். போதிய உடல் நலத்தை எனக்குக் கொடுத்தருளும். குறிப்பிட்ட நேரத்தில் பதில்களை எழுதிமுடிக்கத்தக்க அறிவையும், பெலனையும் அளித்தருளும்.

என் வகுப்பில் என்னைவிட நன்றாகப் படிக்கும் மாணவர்கள் இருக்கிறார்கள் சுவாமி. நான் அவர்களைப் பார்த்துப் பொறாமைப்படாமல், நானும் நன்றாகப் படிக்க முயற்சி செய்யுமாறு நீர் எனக்குத் துணை புரியும்.

பள்ளிப் பாடங்களை மட்டுமின்றி, உம்மைப் பற்றிய சத்தியங்களையும் நான் அறிந்துகொள்ள உதவும். நான் உமக்கு உகந்த பிள்ளையாக நடக்கும்போது, நீர் எனது படிப்பை ஆசீர்வதிக்கிறீர் என்பதை நான் அறிந்திருக்கிறேன். நன்மையும் செவ்வையுமான வழியை எனக்குப் போதித்தருளும்.

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக் காகவும், தலைமை ஆசிரியருக்காகவும் ஜெபிக்கிறேன் சுவாமி. அவர்கள் முயற்சிகளை ஆசீர்வதித்தருளும். எங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கேற்ற பொறுமையையும், ஞானத்தையும் அவர்களுக்குக் கொடுத்தருளும்.

சாலொமோன் இராஜாவைப் போல நானும் செல்வத்தையோ, பலத்தையோ நாடாமல் ஞானத்தை விரும்பி, என் படிப்பில் அதிக அக்கறை காட்ட உதவுமாறு, மீட்பர் இயேசுவின் நாமத்தில் கேட்டுக்கொண்டு ஜெபத்தை முடிக்கிறேன், ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

சாலொமோன் **(1 இரா. 3:5–14)**

மனப்பாட வசனம்

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனா யிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் **(யாக். 1:5).**

7. விளையாடும்போது செய்யவேண்டிய ஜெபம்

எங்கள் அன்பான ஆண்டவரே,

ஓடியாடி விளையாடுவதற்கேற்ப எந்தவிதக் குறையுமின்றி என்னைப் படைத்துக் காப்பாற்றி வருவதற்காக உம்மை நன்றியோடு போற்றி வணங்குகிறேன். உடற்பயிற்சி செய்யவும், விளையாடி மகிழவும் எனக்குப் போதிய உடல் பலத்தைக் கொடுத்துள்ள உமக்கு தோத்திரம் செலுத்துகிறேன்.

சரீர நலனுக்கு உடற்பயிற்சி செய்வதும், விளையாடுவதும் அவசியம் என்பதை நான் அறிந்திருக்கிறேன். விளையாட்டு களில் கலந்துகொள்வதற்கேற்ற திறமையையும், சக்தியையும், வாய்ப்புக்களையும் எனக்குக் கொடுத்தருளும்.

விளையாடுவதின் மூலம் மற்ற மாணவர்களோடு நெருங்கிப் பழகக் கிடைத்த வாய்ப்புக்கு நன்றி. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும், சண்டையின்றிச் சமாதானமாகப் பழகும் பண்பையும் எனக்கு அளித்தருளும்.

எனக்கு * கால்பந்து விளையாட்டில் விருப்பம் அதிகம் சுவாமி. இந்த விளையாட்டின் விதிகளையும், விளையாடும் முறைகளையும் கற்றுக்கொள்ளத்தக்க அறிவை எனக்குக் கொடும். திறமையான பயிற்சியாளரைப் பெற உதவும்.

விளையாட்டில் அளவுக்கு மீறிய கவனம் செலுத்தி, படிப்பை அலட்சியப் படுத்திவிடாதபடி

காத்தருளும். நான் எதைச் செய்தாலும், அப்பா, அம்மாவுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளவும், உமக்குப் பிரியமானதையே செய்யவும் நீரே எனக்குத் துணையாயிரும்.

ஓடியாடி விளையாட முடியாமலிருக்கும் பிள்ளைகளுக்காக ஜெபிக்கிறேன் சுவாமி. அவர்கள் அமர்ந்து விளையாடும் விளையாட்டுகளிலும், செய்முறைப் பயிற்சிகளிலும் மகிழ்ச்சி பெற உதவும். என்னால் முடிந்தவரை நானும் அவர்களுக்கு உதவி செய்ய விரும்புகிறேன்.

விளையாடுவதின் மூலம் நான் மன மகிழ்ச்சி பெற உதவும் உமக்கு நன்றிகூறி ஜெபத்தை முடிக்கிறேன் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

சோம்பேறி (நீதி. 24:30–34)

மனப்பாட வசனம்

மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் (நீதி. 17:22).

8. உணவுக்கு முன்பு செய்யவேண்டிய ஜெபம்

எங்களைப் பராமரிக்கும் பராபரனே,

வனாந்தரத்தில் பயணம் சென்ற இஸ்ரவேல் ஜனங்களுக்காக வானத்திலிருந்து வந்த அப்பமாகிய மன்னாவைக் கொடுத்தவரே, உம்மைப் போற்றித் துதிக்கிறேன்.

இன்று நீர் எங்களுக்குக் கொடுத்துள்ள இந்த உணவுக்காக நன்றி. இதைச் சாப்பிட்டுத் திருப்தியடைய உதவும். இதன்மூலம் நாங்கள் போதிய உடல் நலத்தையும், பெலனையும் பெறும்படி இந்த உணவை ஆசீர்வதித்தருளும்.

போதிய உணவின்றித் தவிப்பவர்களுக்காக உம்மிடம் வேண்டுகிறேன். அவர்களுடைய தேவைகளைச் சந்தித்தருளும். உமது கிருபையால் அவர்களை ஆசீர்வதித்தருளும்.

இந்த உணவோடு நாங்கள் திருப்தியடைந்துவிடாமல், ஆவிக்குரிய உணவை உட்கொள்ளும்படியும் வழிநடத்தும். ஜீவ அப்பமாகிய உம்மை ஏற்றுக்கொள்ளத் துணைபுரியும். நன்றி கூறி ஜெபத்தை முடிக்கிறேன் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

எலியாவும் காகமும் (1 இரா. 17:1–6)

மனப்பாட வசனம்

ஜீவ அப்பம் நானே (யோவான் 6:48).

9. நல்ல நண்பர்களுக்காக வேண்டும் ஜெபம்

எங்களை நேசிக்கும் அன்பான ஆண்டவரே,

"நான் உங்களைச் சிநேகிதர் என்றேன்" என்று கூறி உமது சீடர்களை நண்பர்களாக ஏற்றுக்கொண்டு அனைத்துச் சத்தியங்களையும் அவர்களுக்கு அறிவித்தீரே. உம்மை நான் நன்றியறிதலோடு போற்றித் துதிக்கிறேன். "சிநேகிதன் எல்லாக்

காலத்திலும் சிநேகிப்பான்" என்பதுபோல இன்றும் எங்களை நேசித்து எங்களுக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருக்கும் உம்மை நான் என் முழு இருதயத்தோடும் தோத்தரிக்கிறேன்.

யோனத்தான் தாவீதைத் தன் உயிரைப் போலச் சிநேகித்தான் என்று வேதாகமம் கூறுகிறது. சவுல் தாவீதைக் கொல்ல முடிவு செய்தபோது, யோனத்தான் துணிவுடன் தாவீதுக்காகப் பேசி அவனைத் தப்புவித்ததைப் பற்றியும் நான் படித்திருக்கிறேன். பின்னர் யோனத்தான் இறந்தபிறகு தாவீது அவனுடைய கால்கள் முடமான மகன் மேவிபோசேத்தை இறுதி வரையில் பராமரித்தது பற்றியும் வேதாகமம் கூறுகிறது. நட்புக்கு இலக்கணமாக விளங்கும் இவர்களைப் போன்று எனக்கும் ஓர் உண்மை நண்பன் கிடைக்க உதவும்படி அன்புடன் வேண்டுகிறேன்.

பள்ளியிலும், வெளியிலும் தீய பழக்கவழக்கங்களும், தவறான நடத்தையும் பெருகிவரும் இக்காலத்தில் உம்மையே மீட்பராக ஏற்றுக்கொண்ட ஒரு பையன் எனக்கு நண்பனாகக் கிடைக்க உதவும். அது என் ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று நண்பர்களும் உமக்காகத் திட விசுவாசத்துடன் ஒரு நாட்டின் இராஜாவையே எதிர்த்து நிற்க முன்வரவில்லையா? எவ்விதத்திலும் சோர்ந்து போகாமல் உம்முடைய பணியைச் செய்யக்கூடிய நண்பர்களை எனக்குக் கொடுத்தருளுமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

நல்ல நண்பர்களைப் பெறத்தக்க வகையில் நான் அன்போடும், தாழ்மையோடும் நடந்துகொள்ள எனக்குத் துணைபுரியும். பாடத்திலோ, விளையாட்டிலோ தேவைப் படுபவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பையும், மனப் பக்குவத்தையும் எனக்குத் தந்தருளும். மற்றவர்கள் எனக்கு என்ன செய்கிறார்கள் என்று எதிர்பார்ப்பதைவிட, நான் அவர்களுக்கு என்ன செய்ய முடியும் என்று நினைத்துச் செயல்படும் நற்குணத்தை எனக்குக் கொடும், ஆண்டவரே. மற்றவர்களிடம் குறை கண்டுபிடிப்பதைவிட அவர்களின் நல்ல குணங்களைப் பாராட்டும் மனப்பான்மையை எனக்கு அளித்தருளும். தனிமையாக ஒதுங்கியிருக்கும் மாணவர் களுக்கு என்னாலியன்ற உதவியைச் செய்து அவர்களை மகிழ்ச்சியடையச் செய்ய உதவும்.

“நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்” என்று யாக்கோபு தனது நிருபத்தில் எழுதியிருக்கிறாரே. நானும் என் நண்பர்களைப் பொறுத்த மட்டில் இந்த வசனத்துக்கேற்றபடி நடந்துகொள்ள நீரே எனக்குத் துணையாயிரும். அவர்களுக்கு விரோதமாக நான் ஏதாவது தவறு செய்திருந்தால் உடனடியாக அதை அறிக்கையிட்டு மன்னிப்புக் கேட்பேன். யோபுவைப் போல எனது சிநேகிதர்களுக்காக ஜெபம் பண்ணுவேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக உம்மையே என் மெய்யான நண்பராகக் கொண்டு பேச்சிலும், செயலிலும், நடத்தையிலும் உமக்கு உண்மையுள்ளவனாக இருக்க நீரே எனக்குத் துணையாயிரும் இயேசுவே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

தாவீதும், யோனத்தானும் (1 சாமு. 19:1–7)

மனப்பாட வசனம்

சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான் (நீதி. 17:17).

10. விரோதம் பண்ணுபவர்களுக்காகச் செய்ய வேண்டிய ஜெபம்

எங்களை வழிநடத்தும் வல்ல தேவனே,

நீர் எங்களுக்காகச் சிலுவையில் * அறையப்பட்டு வேதனையில் துடித்துக் கொண்டிருந்தபோது "பிதாவே இவர்களுக்கு மன்னியும்" என்று உம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக வேண்டிக் கொண்டீரே! உமது மன்னிக்கும் அன்பை நினைத்து உம்மைப் போற்றித் துதிக்கிறேன். தன்னைக் கொல்வதற்காக விரட்டி வந்த சவுலைப் பழிவாங்க வாய்ப்பிருந்தும் அவனை விட்டுவிட்ட தாவீதை எண்ணிப் பார்க்கிறேன். எங்களுக்கு வழிகாட்டும் வகையில் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள இத்தகைய அடியார்களின் வரலாறுகளுக்காக உமக்கு மிகவும் நன்றி ஆண்டவரே.

* இப்பவும் எங்கள் பள்ளியில் ஒரு மாணவன் அமைதியாகப் படித்துக் கொண்டிருக்கும் என்னைப் போன்ற மாணவர்களுடன் வீண் வம்புக்கு வருகிறான். சரிக்குச் சரியாக அவனோடு சண்டை போடாமல் அவனுக்கு நன்மை செய்வதின் மூலம் அவனை மாற்ற நான் முயன்று வருகிறேன். இந்த முயற்சியில் நான் வெற்றிபெற நீரே பக்கபலமாயிருந்து வழிகாட்டி நடத்தியருளும். சமாதானம் பண்ணுவதின்மூலம் நான் உம்முடைய புத்திரன் என்னும் பாக்கியத்தைப் பெற நீரே உதவும்.

உம்மைப் பற்றி மற்றவர்களிடம் எடுத்துக் கூறும்போது, சில மாணவர்கள் கேலி செய்கிறார்கள்; சிலர் இல்லாததையும் பொல்லாததையும் ஆசிரியர்களிடம் கூறி கோள்மூட்டி விடுகிறார்கள். இதனால் எனக்குள் பொங்கிவரும் கோபத்தை அடக்குவது கடினமாக இருக்கிறது; அவர்களைப் பழிவாங்கும்

எண்ணம் மனதில் தோன்றுகிறது. இதற்காக நான் உம்மிடம் மன்னிப்புக் கேட்கிறேன். இத்தகைய எண்ணங்களை என் மனதிலிருந்து அகற்றிப் போடும்படி வேண்டுகிறேன்.

எங்களை நிந்திக்கும் இந்த மாணவர்களுக்காகவும், துன்பப்படுத்தும் முரட்டு மாணவர்களுக்காகவும் ஜெபிக்கும் மனப்பான்மையை எனக்குக் கொடும். எலிசா தீர்க்கதரிசி தனக்கு விரோதமாக வந்த சீரிய படைவீரர்களை அழிக்காமல், அவர்களுக்கு உணவளித்து உபசரித்ததுபோல, நானும் இவர்களுக்கு நன்மை செய்யும்படியான குணத்தை எனக்குக் கொடும்.

இந்த மாணவர்களும் தங்கள் தவறுகளை உணர்ந்து, உம்மை ஏற்றுக்கொள்ளும்வண்ணம் உமது பரிசுத்த ஆவியானவரின் மூலம் அவர்கள் உள்ளத்தை ஏவியருளும். அவர்கள் தங்கள் வீணான செயல்களை விட்டுவிட்டுத் தங்கள் படிப்பில் கவனம் செலுத்தவும், நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சியடைவதின் மூலம் சிறந்த வாழ்க்கையைப் பெறவும் நீரே உதவும்.

நான் என்னையறியாமல் எனது தவறான செய்கை அல்லது பேச்சின்மூலம் எவரையாவது புண்படுத்தியிருந்தால் தயவாய் அதை எனக்கு உணர்த்தியருளும். உடன்தானே நான் அவர்களிடம் சென்று தவறுகளை அறிக்கையிட்டு, மன்னிப்புக் கேட்டு மறுபடியுமாக அவர்களுடன் ஒப்புரவாக நீரே எனக்குத் துணைபுரியும்.

மற்றவர்கள் எனக்குச் செய்யும் தீமைகளை மன்னிக்கும் குணத்தை எனக்குக் கொடுத்தருள வேண்டுமென்று இயேசுவின் நாமத்தில் தாழ்மையுடன் வேண்டுகிறேன் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

எலிசாவும் சீரியப் படை வீரர்களும் **(2 இரா. 6:18–23)**

மனப்பாட வசனம்

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் (லூக்கா 6:27).

11. ஆலயத்துக்குப் போகும்போது செய்ய வேண்டிய ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

உம்முடைய ஆலயத்துக்கு வந்து ஜெபித்த அன்னாளை நினைத்துப் பார்க்கிறேன் சுவாமி. நீர் அவளுடைய ஜெபத்தைக் கேட்டீர். அவள் வேண்டிக்கொண்டபடியே சாமுவேலை அவளுக்கு மகனாகக் கொடுத்தீர். உம்மைப் போற்றித் துதிக்கிறேன். சிறுவன் சாமுவேல் எங்களுக்கு முன்மாதிரியாக விளங்குவதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். அவன் ஆலயத்தில் உம்மைப் பணிந்து கொண்டான். உமக்குப் பணிவிடை செய்தான். நானும் சாமுவேலைப் போல ஆலயத்துக்கு வந்து உம்மைப் பணிந்து கொள்ளவும், உமக்குப் பணிவிடை செய்யவும் எனக்கு வாஞ்சையையும், விருப்பத்தையும் கொடுத்தருளும்.

"கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாக இருந்தேன்" என்று தாவீது கூறினார். நானும் மகிழ்ச்சியோடு ஆராதனைகளில் கலந்துகொள்ளவும், ஓய்வுநாள் பள்ளிக்கு ஒழுங்காகச் சென்று உம்மைப் பற்றி இன்னுமதிகமாக அறிந்து கொள்ளவும் எனக்கு உதவும். ஆலயங்களில் ஒன்றுகூடி, உம்மைப் போற்றித் துதிக்கவும், புகழ்ந்து பாடவும் எங்களுக்கு அளித்த சிலாக்கியத்திற்காக உமக்கு நன்றி தேவனே.

சாமுவேல் ஆலயத்தில் பணிவிடை செய்ததுபோல, நானும் என்னால் இயன்றவரை ஆலயப் பணிகளில் உதவி

செய்யும் நற்குணத்தை எனக்குக் கொடும். போதகருக்கும், ஓய்வுநாள் பள்ளி ஆசிரியருக்கும் நான் உதவியாயிருக்கும்படி நீரே அருள்புரியும். சிறுவன் சாமுவேலைப் போல நானும் ஆலயத்தில் ஜெபிக்கக் கற்றுக் கொள்ளவும், உமக்கு ஊழியம் செய்யவும், உமக்குக் கீழ்ப்படியவும் நீரே வழிகாட்டி நடத்தி யருளும்.

ஆலய ஆராதனைகளை நடத்துபவர்களுக்காகவும், ஆலயத்தைப் பராமரிப்பவர்களுக்காகவும் உம்மிடம் ஜெபிக்கிறேன் ஆண்டவரே. மற்றவர்களை உம்மிடம் வழிநடத்தும் போதகருடைய பணியில் அவருக்குப் போதிய ஞானத்தையும், கிருபையையும் அளித்து அவரை ஆசீர்வதித்தருளும். ஓய்வுநாள் பள்ளி, வாலிபர் சங்கம், தாய்மார் கூட்டம் இவற்றை நடத்துபவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளைக் கொடுத்து உதவியருளும். மற்றும் ஆலயப் பராமரிப்பில் ஈடுபட்டுள்ள கோயில்பிள்ளை, தோட்டக்காரர், காவல்காரர் இவர்களுக்கும் உறுதுணையாயிரும்.

நீர் பன்னிரண்டு வயது சிறுவனாக இருக்கும்போது ஆலயத்துக்குச் சென்று, ஆண்டவரைப் பற்றி விவாதித்தீர். நானும் அவ்வாறே ஆலயத்துக்குச் சென்று உம்மைப் பற்றி இன்னுமதிகமாக அறிந்துகொள்வதோடு மட்டுமின்றி, மற்ற சிறுவர்களையும் அழைத்துவர நீரே உதவும்.

* எங்கள் ஆலயத்தில் கட்டுமானப் பணி நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனையோ இடங்களில் புதிய ஆலயங்கள் கட்டப்பட வேண்டியிருக்கிறது. ஆண்டவருடைய வீட்டைக் கட்டுவதற்காக இஸ்ரவேல்

ஜனங்கள் மனமுவந்து கொடுத்ததுபோல, நாங்களும் உற்சாகமாகக் கொடுக்கவும், ஆர்வத்துடன் பணியில் ஈடுபடவும் நீரே எங்களுக்கு ஆலோசனைகள் கூறி வழிநடத்தியருளும்.

மறுபடியுமாக எங்கள் ஆலயத்துக்காகவும், ஆராதனையை நடத்துபவர்களுக்காகவும், ஆராதனையில் கலந்து கொள்பவர்களுக்காகவும் நன்றி கூறி ஜெபத்தை முடிக்கிறேன் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

சிறுவன் சாமுவேல் (1 சாமு. 1:24-28; 2:18, 26)

மனப்பாட வசனம்

கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச்சியாயிருந்தேன் (சங். 122:1).

12. ஓய்வுநாள் பள்ளிக்காக ஜெபம்

எங்களை வழிநடத்தும் தேவனே,

நாங்கள் ஒன்றாகக் கூடி உம்மைத் துதித்துப்பாட அளித்த இந்த வாய்ப்புக்காக உமக்கு தோத்திரம். உம்மைப் பற்றி மென்மேலும் அறிந்துகொள்ளும்படி உதவும் இந்த ஓய்வுநாள் பள்ளிக்காக நன்றி தேவனே.

இந்த ஓய்வுநாள் பள்ளியை ஆசீர்வதித்தருளும். இதை நடத்தும் தலைவருக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் தோத்திரம். நீரே அவர்களுக்குத் துணையாயிருந்து வழிகாட்டியருளும்.

கடந்த வாரம் முழுவதும் எங்களைக் கண்மணியைப் போலக் காத்து, இன்று உம்மைத் துதிக்கும் துதியோடு ஒன்றாகக் கூடிவரச் செய்த தயவுக்காக உமக்கு நன்றி

கூறுகிறேன். இன்று வர முடியாத மாணவர்களுக்காக ஜெபிக்கிறேன். அவர்களுடைய பிரச்சினைகளைப் போக்கியருளும்; தடைகளை அகற்றியருளும்; போதிய உடல் நலத்தைக் கொடுத்தருளும். இன்னும் புதிய மாணவர்களை அழைத்து வரும் எங்கள் முயற்சிகளை ஆசீர்வதித்தருளும்.

இன்று நாங்கள் கற்கப்போகும் புதிய பாடல்களுக்காக நன்றி சுவாமி. ஜெபிக்கும் வாய்ப்பைக் கொடுத்ததற்காக தோத்திரம். வேதாகமக் கதைகள் மூலம் நல்ல போதனைகளை அறிந்துகொள்ளப் போவதற்காக நன்றி. ஆசிரியர் கூறும் குட்டிக் கதைகள் எங்களுக்கு ஆசீர்வாதமாக இருக்கும்படி செய்யும். வேதாகம நிகழ்ச்சிகள்மூலம் உம்மைப்பற்றி இன்னுமதிகமாகத் தெரிந்துகொள்ள உதவும். உமது அன்பை உணர்ந்துகொள்ளக் கிருபை செய்தருளும்.

இன்று நான் கற்கப் போகும் பாடங்களையும், கேட்கப் போகும் கதைகளையும் பள்ளியிலுள்ள மற்ற மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லும் வாஞ்சையை எனக்குக் கொடும்.

சிறுவர்களாகிய நாங்கள் ஒன்றுகூடி, உம்மைப் போற்றித் துதிக்கக் கிடைத்த வாய்ப்புக்காக மறுபடியுமாக நன்றிகூறி ஜெபத்தை முடிக்கிறேன். இயேசுவின் மூலம் ஜெபம் கேளும் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

ஆலயத்தில் இயேசு (லூக்கா 2:40–50)

மனப்பாட வசனம்

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் (சங். 95:6).

13. தாலந்துகளுக்காக வேண்டும் ஜெபம்

எங்கள் அருமை ஆண்டவரே,

எங்கள் படிப்புக்கும், வாழ்க்கைக்கும் தேவையான திறமைகளைக் கொடுத்து எங்களை வழிநடத்தி வரும் உம்மைப் போற்றித் துதிக்கிறேன். உம்மைப் புகழ்ந்து பாடவும், இசைக் கருவிகள்மூலம் துதிக்கவும் எங்களுக்குக் கொடுத்துள்ள தாலந்துகளுக்காக உமக்கு நன்றி கூறுகிறேன்.

தாலந்துகளைப் பற்றிய உவமைக் கதை மூலம் எங்களுக்குச் சிறந்த போதனைகளைக் கொடுத்ததற்காக உமக்குத் தோத்திரம் செலுத்துகிறேன். எங்களுக்கு நீர் கொடுத்துள்ள திறமைகளுக்காக நன்றி தேவனே. நாங்கள் அவற்றைப் புதைத்து வைக்காமல் உம்முடைய நாம மகிமைக்காகப் பயன்படுத்தும்படி உதவும்.

* நீர் எனக்குப் பாடும் திறமையைக்கொடுத்தமைக்காக நன்றி தேவனே. நான் இந்தத் தாலந்தை இன்னும் வளர்த்துக் கொள்ளும்படி போதிய பயிற்சிகள் பெறும் வாய்ப்புக்களை எனக்குக் கொடுத்தருளும். நான் என் குரலைப் பற்றிய பெருமையால் அழிவைத் தேடிக் கொள்ளாதபடிக்கு நீரே என்னைக் காத்தருளும். வீணான பாடல்களைப் பாடுவதற்காக அல்ல, உம்மைப் போற்றிப் பாடவே நான் என் தாலந்தைப் பயன்படுத்தும்படி வழிகாட்டும்.

* இரண்டு தாலந்துகளைப் பெற்றவன் மேலும் இரண்டு தாலந்துகளைச் சம்பாதித்ததுபோல, நான் பாடும் திறமைக்கு ஏற்ற பிற திறமைகளையும் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

இசைக் கருவிகளை இசைக்கக் கற்றுக்கொள்வது அதிகப் பலன் தரும் என்று நம்புகிறேன். குறிப்பாக * கிடார் என்ற இசைக் கருவியை இசைப்பதில் திறமை பெற வாஞ்சிக்கிறேன். பொருத்தமான பயிற்சியாளரைப் பெற நீரே உதவும். என் முயற்சிகளை ஆசீர்வதியும்.

* என் நண்பனுக்கு நீர் பாடல்களை எழுதும் திறமையைக் கொடுத்திருப்பதற்காகவும், * என் பள்ளி மாணவனுக்கு கதை எழுதும் தாலந்தை அளித்திருப்பதற்காகவும் உமக்கு நன்றி கூறுகிறேன். அவர்களும் உமக்காக இந்தத் திறமைகளைப் பயன்படுத்த நீரே அவர்களுக்கு வழிகாட்டியருளும்!

எனக்கு இப்போதுள்ள திறமைகள் மூலமாகவும் இனி பெறப்போகும் தாலந்துகள் மூலமாகவும் உம்முடைய நாம மகிமைக்காக கிறிஸ்துவை அறிவிப்பதையே என் நோக்கமாகக் கொண்டிருக்கிறேன் என்று உறுதி கூறுகிறேன். நீரே என் செயல்களை ஆசீர்வதித்தருளும் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

தாலந்துகள் (மத். 25:14–30)

மனப்பாட வசனம்

கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் (மத். 25:21).

14. பெற்றோருக்காக வேண்டும் ஜெபம்

எங்களை நேசிக்கும் ஆண்டவரே,

நீர் சிறு பையனாக நாசரேத்தூரிலே வளர்ந்தபோது பெற்றொருக்குக் கீழ்ப்படிந்த பையனாக, ஞானத்திலும் கிருபையிலும் நிறைந்து எங்களுக்கு வழிகாட்டியதற்காக

உம்மை வணங்கித் துதிக்கிறேன். பிள்ளைகள் எப்படி வளர வேண்டும் என்பதற்காக நீர் கூறிய இரண்டு குமாரன்களைப் பற்றிய உவமைக் கதைக்காகவும் உமக்கு நன்றி தேவனே. நானும் அந்த மூத்த குமாரனைப் போல பெற்றோரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க உதவும்.

என்னையும், தம்பி, தங்கைகளையும் அன்புடன் பராமரிக்கும் எங்கள் நேசப் பெற்றோருக்காக உம்மைத் துதிக்கிறேன். உமது கிருபையாலும், தயவாலும் அவர்களை ஆசீர்வதித்தருளும். அன்பு அப்பா தனது வேலைப் பளுவின் மத்தியிலும் எங்களை அக்கறையாய்ப் பராமரித்து வருவதற்காக உமக்கு நன்றி தேவனே. அவருடைய வேலையை ஆசீர்வதித்தருளும். அவர் அதை ஞானத்துடனும், புத்தியுடனும் செய்யவும், மேலதிகாரிகள் நன்மதிப்பைப் பெறவும் நீரே அவருக்கு வழிகாட்டி நடத்தியருளும். அன்பு அம்மா வீட்டு வேலைகள், பொறுப்புக்கள் மத்தியிலும் எங்களை அன்புடன் கவனித்து வருகிறார்கள்; பள்ளிப் பாடங்களிலும் உதவி வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய பலத்தையும், உடல் நலத்தையும் அளித்து ஆசீர்வதிக்குமாறு தயவாய் வேண்டுகிறேன்.

அன்பு அப்பாவும், அம்மாவும் எங்களுக்கு உம்மைப் பற்றிப் போதிக்கும்போது, அதை நாங்கள் கருத்தாய்க் கவனித்து ஏற்றுக்கொள்ளத் துணை புரியும். நாங்கள் மனந் திரும்பி, உம்மை விசுவாசித்து, உமது பிள்ளைகளாக நடந்துகொள்வதின்மூலம் அவர்களுக்கு

மகிழ்ச்சியைத் தர எங்களுக்கு உதவும். எங்கள் பிரச்சினைகளில் அவர்கள் உதவி புரியும் வண்ணம் அவர்களுக்கு உம்முடைய ஞானத்தைத் தந்தருளும்.

யோசேப்பு தனது தகப்பனாருக்குக் கீழ்ப்படிந்து தன் அண்ணன்மாரைத் தேடிச் சென்றதுபோல, நாங்களும் எங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலும் கீழ்ப்படிய நீரே கிருபையாய் எங்களுக்கு உதவும். அன்பு அம்மா தனது பணிகளில் கஷ்டப்படும்போது அவர்களுக்கு உதவி செய்யும் நல்ல குணத்தை எனக்கு அளித்தருளும். வீணான பொருட்களில் ஆசைப்பட்டு அவர்களுக்குத் தொந்திரவு கொடுக்காமலிருக்க உதவும்.

பெற்றோரைக் கனம்பண்ணும் நல்ல புத்தியை எனக்குக் கொடும். நான் எனது படிப்பிலும், நடத்தையிலும் அவர்களுக்குப் பெருமை தேடித் தரத்தக்க வகையில் நடந்துகொள்ளத் துணைபுரியும். சகோதரர்கள் நாங்கள் எங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு அவர்கள் மனதைப் புண்ணாக்காமலிருக்க எங்களுக்கு உதவும்.

இயேசுவை நேசிக்கும் குடும்பமாக எங்கள் குடும்பம் விளங்கும்படி ஆசீர்வதித்தருளும். சாப்பாட்டு வேளையில் உம்மைத் துதிக்கவும், குடும்ப ஜெப வேளையில் ஒழுங்காகக் கலந்துகொள்ளவும் உதவி செய்யும். வேத வாசிப்பு, தனி ஜெபத்தின்மூலம் முன்மாதிரியாக இருந்து பெற்றோரை மகிழ்விக்க உதவும்.

தாய் தந்தையரற்ற அனாதைப் பிள்ளைகளுக்கு நீரே தாயும், தகப்பனுமாக இருந்து அவர்களை அரவணைத்துக் காப்பாற்றியருளும். உம்மை அறிவதன்மூலம் அவர்கள் உமது அன்பை உணர்ந்துகொள்ளக் கிருபை செய்தருளும்.

மறுபடியும் அன்புப் பெற்றோரின் நலனுக்காக வேண்டிக் கொண்டு ஜெபத்தை முடிக்கிறேன் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

யோசேப்பு (ஆதி. 37:1–4, 12–17)

மனப்பாட வசனம்

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் (எபே. 6:1).

15. பயணம் புறப்படுவதற்கு முன்பு செய்யவேண்டிய ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

இஸ்ரவேல் ஜனங்கள் வனாந்திர வழியாகப் பயணம் செய்தபோது செங்கடலைப் பிளந்து, அவர்களைப் பார்வோனின் கைக்குத் தப்புவித்த ஆண்டவரே உமக்கு நன்றி. அவர்கள் செல்லும்போது பகலில் மேகங்களின்மூலம் நிழலை அளித்தும், இரவில் அக்கினி ஸ்தம்பங்கள் மூலம் வெளிச்சம் காட்டியும் அவர்களை வழிநடத்திய உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். அவர்கள் குடிப்பதற்கு கன்மலையிலிருந்து நீரையும், புசிப்பதற்கு வானத்திலிருந்து மன்னாவையும், காடைகளையும் அளித்துப் பராமரித்த தேவனே, உம்மை நன்றியறிதலோடு போற்றித் துதிக்கிறேன்.

இன்று நாங்கள் பயணம் புறப்படுகிறோம். இஸ்ரவேல் ஜனங்களைப் பாதுகாத்ததுபோல, செல்லும் வழியில் எந்தவித ஆபத்தும் மோசமும் இன்றி எங்களைப் பத்திரமாக ஊர் போய்ச் சேர்த்தருள வேண்டுகிறேன். பயணத்தின்போது எங்கள் தேவைகளைச் சந்தித்தருளும். உம்முடைய தூதர்களைக் கொண்டு எங்களை வழிநடத்தியருளும்.

நாங்கள் செல்லுமிடத்திலுள்ள காரியங்கள் நலமாகவும், எளிதாகவும் நடந்து முடியக் கிருபை புரிந்தருளும். புதிய

இடங்களில் யாக்கோபுவைப் பாதுகாத்ததுபோல, நீரே எங்களையும் கவனித்தருளும்.

நீர் எங்களுடனே இருந்து, நாங்கள் போகிற இடத்தி லெல்லாம் எங்களைக் காத்து, இந்த இடத்துக்கு எங்களைத் திரும்பி வரப்பண்ணுவீர் என்ற நம்பிக்கையோடு இந்தப் பயணத்தைத் துவங்குகிறோம். எங்களை உமது கிருபையாலும் ஆசீர்வாதத்தாலும் நிரப்பியருளும்.

மீட்பர் இயேசுவின் நாமத்திலே வேண்டுகிறோம் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

யாக்கோபு (ஆதி. 28:10–22)

மனப்பாட வசனம்

கர்த்தர் உன் போக்கையும் உன் வர்த்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார் (சங். 121:8).

16. சுகமின்றி இருக்கும்போது செய்யவேண்டிய ஜெபம்

பரம வைத்தியராகிய தேவனே,

இந்நாள் வரையும் என்னைச் சுகத்துடனும், பாதுகாப்புடனும் காப்பாற்றிவரும் என் ஆண்டவராகிய உம்மைப் போற்றித் துதிக்கிறேன். ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லவும், பாடங்களை நன்றாகப் படிக்கவும் கொடுத்த வாய்ப்புக்காக உம்மைத் தோத்தரிக்கிறேன்.

இப்போதும் நான் உடல்நலக் குறைவினால் படுக்கையில் அவதிப்படுவதை நீர் அறிவீர். எழுந்து நடமாட முடியாமல் படுத்தே இருப்பது எவ்வளவு கடினம் என்பதையும் நீர் அறிந்திருக்கிறீர். எழுந்து நட என்று கூறி எத்தனையோ பேரைக்

குணமாக்கியுள்ள என் ஆண்டவரே, நானும் கூடிய விரைவில் எழுந்து நடக்க உதவும்.

வேதனைகளினால் என் உடலும், உள்ளமும் சோர்ந்து போகின்றன ஆண்டவரே. உமது காயப்பட்ட கரங்களால் என்னை ஆற்றித் தேற்றும். உமது கரங்களின் தழும்புகளால் நான் குணமடையும்படி கிருபை புரிந்தருளும்.

நான் நோயில் படுத்திருப்பது அம்மாவுக்கும், அப்பாவுக்கும் அதிக வருத்தத்தைத் தருகிறது ஆண்டவரே. அவர்கள் வேலைப் பளுவும் அதிகமாகிறது. அவர்கள் என்னை அன்போடு பராமரித்து வருவதற்காக நன்றி தேவனே. அவர்களுக்குத் தேவையான ஒத்தாசையும், உதவியும் கிடைக்கும்படி அருள்புரியும்.

என்னைக் கவனித்து வரும் மருத்துவருக்காகவும், அவரது உதவியாளர்களுக்காகவும் தோத்திரம் செலுத்துகிறேன். அவர்கள் பொறுப்போடும், ஞானத்தோடும் செயல்பட்டு, நான் மட்டுமின்றி என்னைப் போன்ற மற்ற நோயாளிகளும் உடல் நலம் பெற உதவும்படி வழிகாட்டியருளும்.

இந்த நோயின் காலத்தில் நான் இன்னுமதிகமாக உம்மைப் பற்றித் தியானிக்கவும், உம்மைக் கிட்டிச் சேரவும் எனக்குக் கிடைத்த வாய்ப்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் சோர்ந்து போகாமல் திடவிசுவாசத்தைப் பெறும்படி நீரே எனக்குப் பக்கபலமாயிரும்.

கூடிய விரைவிலேயே நான் சுகம் பெற்று மறுபடியுமாக என் படிப்பைத் தொடரவும், என் கடமைகளை ஒழுங்காகச் செய்யவும்

கிருபை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொண்டு ஜெபத்தை முடிக்கிறேன், தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

எசேக்கியா இராஜா (2 இரா. 20:1–7)

மனப்பாட வசனம்

உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன். இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன் (2 இரா. 20:5).

17. சோதனைகள் வரும்போது செய்யவேண்டிய ஜெபம்

அன்புள்ள இயேசு சுவாமி,

நீர் சாத்தானால் சோதிக்கப்பட்டபோது, அவனுக்கு எதிர்த்து நின்று அவனை வெற்றி பெற்றீரே. உம்மைப் போற்றித் துதிக்கிறேன். நீர் சோதிக்கப்படுபவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருப்பதால் உம்மைத் துதிக்கிறேன்; நன்றி செலுத்துகிறேன்.

"சோதனைகளைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்" என்று கூறப்பட்டிருக்கிறதே. நானும் உத்தமனென்று பெயர் பெற்று, உம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத் தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெற விரும்புகிறேன்.

ஆனாலும் சோதனைகள் என்னை அதிகமாகத் தாக்கு கின்றன. வீட்டிலும், பள்ளியிலும், வெளியிலும் சாத்தானின் பல சோதனைகளுக்கு உள்ளாகிறேன். சில வேளைகளில் அம்மா ஏதாவது முக்கியமான வேலையைச் செய்யக் கூப்பிட்டால் முணுமுணுத்தபடியே மறுத்துவிடத் தோன்றுகிறது. நான் கேட்டதை வாங்கித்தர மறுக்கும்போது எரிச்சலடைகிறேன்.

தம்பியோ, தங்கையோ என் பொருளை எடுத்துவிட்டால் சண்டை போடத் தோன்றுகிறது.

பள்ளியில் கெட்ட மாணவர்களின் பேச்சைக் கேட்டு வகுப்புக்கு வராமல் விளையாடச் செல்லும்படி சோதிக்கப் படுகிறேன். என் படிப்பைப் பற்றியோ, என் உடைகள், பொருட்களைப் பற்றியோ குறை கூறினால் கோபம் வருகிறது. வெளியில் விற்கப்படும் தின்பண்டங்களைக் கண்டால் அம்மாவின் கட்டளையை மீறி வாங்கித் தின்னும்படி சோதிக்கப்படுகிறேன். இவ்வாறு எத்தனையோ சோதனைகள் மூலம் சாத்தான் உம்மைவிட்டு என்னைத் திசை திருப்ப முயலுகிறான். இவற்றிலிருந்து என்னைக் காத்துக்கொள்ள நீரே உதவும்.

சோதனையைத் தாங்கத் தக்கதாக சோதனையோடு கூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. உமது வசனங்களால் என்னை வழிநடத்தும். உம்மீதுள்ள திட விசுவாசத்தால் நானும்கூட "அப்பாலே போ, சாத்தானே" என்று சொல்லத்தக்க மனபலத்தைப் பெறும்படி உதவும்.

நான் எப்போதும் உமக்கே கீழ்ப்படிந்திருக்கும்படி என்னைத் தாங்கி வழிநடத்தும். வீட்டிலும், பள்ளியிலும் வெளியிலும் உம்முடைய பிள்ளை என்ற பெயரை எடுத்து, மற்றவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து, இறுதியில் ஜீவ கிரீடத்தைப் பெற கிருபையாய் உதவ வேண்டுமென்று சோதனைகளை ஜெயித்த இயேசுவின்மூலம் ஜெபிக்கிறேன் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

இயேசு சோதிக்கப்படுதல் (லூக்கா 4:1–13)

மனப்பாட வசனம்

தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் (யாக். 4:7).

18. கவலைப்படும்போது செய்ய வேண்டிய ஜெபம்

அன்பால் பராமரிக்கும் ஆண்டவரே,

நீர் உமது தீர்க்கதரிசியாகிய எலிசாவின் மூலம் ஓர் ஏழை விதவையின் கவலைகளைப் போக்கினீரே. நான் உம்மை நன்றியறிதலோடு போற்றி வணங்குகிறேன்.

* இப்போதும் கவலை என்னைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நான் கணக்குப் பாடத்தைச் சரிவரச் செய்வதில்லை என்று ஆசிரியர் இன்று என்னைக் கடிந்து கொண்டார். நான் எவ்வளவோ முறை செய்து பார்த்தாலும் சில கணக்குகளைப் புரிந்துகொள்வதே கடினமாக இருக்கிறது.

* முன்பெல்லாம் அம்மா எனக்கு ஒவ்வொரு பாடத்தைப் படிப்பதிலும் உதவி செய்வார்கள். இப்போதோ பாட்டிக்குச் சுகமில்லையென்று அவர்களைக் கவனித்துவரப் போயிருக்கிறார்கள். அப்பாவுக்கோ அலுவலகத்தில் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் சோர்ந்துபோய் வீட்டுக்கு வருகிறார். அவரைத் தொந்தரவு செய்யவே தயக்கமாக இருக்கிறது.

ஆண்டவரே, நீர் எங்களை விசாரிக்கிறவரானபடியால், நான் இந்தக் கவலையை உம்மீது வைத்துவிட்டேன். நீரே எனது இந்தக் கவலையின் பாரத்தைப் போக்கி இளைப்பாறுதல் தர வேண்டுமென்று கெஞ்சுகிறேன்.

என்னைக் கவலைகள் சூழ்ந்து கொள்ளும்போதெல்லாம் இவை நிரந்தரமானவை அல்ல; கிறிஸ்துவுக்குள் நான் நித்திய மகிழ்ச்சியைப் பெற முடியும் என்பதை அறிந்திருக்கிறேன்

* இந்த இரண்டு பத்திகளுக்குப் பதிலாக உங்கள் கவலைகள் / பிரச்சினைகளை விவரித்துக் கூறலாம்.

ஆண்டவரே, என்றாலும் பிரச்சினைகள் வரும்போது நான் சோர்ந்து போகிறேன். நான் உம்மையே நம்புகிற படியால் உயர்ந்த அடைக்கலத்தில் வைக்கப்படுவேன் என்பதை நான் முற்றிலுமாக உணர்ந்து, விசுவாசத்தோடிருக்க எனக்கு உதவும். நான் உம்மிலும் உமது சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படும்படி செய்யும்.

எனது கவலைகள், பிரச்சினைகள் எல்லாவற்றிலும் நான் என்னில் அன்புகூருகிற கிறிஸ்துவாலே முற்றும் ஜெயங் கொள்ளுகிறவனாயிருக்கிறேன் என்று சொல்லிக் கொள்ளத் தக்கதான மனபலத்தை எனக்குக் கொடுத்தருளும்.

நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று வாக்குத்தத்தம் செய்திருக்கும் ஆண்டவரே, நீரே எனக்குத் தைரியமூட்டி, என் சகாயராக இருந்து, என் கவலைகளைப் போக்கியருளும். இயேசு இரட்சகரின் மூலம் ஜெபம் கேளும் பிதாவே ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

எலிசாவும் ஏழை விதவையும் (2 இரா. 4:1–7)

மனப்பாட வசனம்

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள் (1 பேதுரு 5:7).

19. இரட்சிப்புக்காக வேண்டும் ஜெபம்

கிருபை நிறைந்த எங்கள் ஆண்டவரே,

நீர் உம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி இவ்வளவாய் எங்கள்மீது அன்புகூர்ந்தீரே உம்மை நன்றியறிதலோடு போற்றித் துதிக்கிறேன். நாங்கள் பாவிகள் சுவாமி, எங்கள் பாவத்தின் சம்பளம் மரணமே. ஆனால் எங்களை மரணத்திலிருந்து காப்பாற்றுவதற்காக, உமது குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையில் வேதனைப்பட்டு மரிக்க விட்டுக் கொடுத்தீரே. எங்கள் அக்கிரமங்களுக்குப் பதிலாக அவர் தண்டனை ஏற்றாரே. இந்த அளவற்ற அன்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்; அதே வேளையில் கிறிஸ்து தமது இரத்தத்தால் பெற்றுத் தந்த இரட்சிப்பை நானும் பெற்று மகிழ வாஞ்சிக்கிறேன்.

"என் அக்கிரமங்களை நான் அறிக்கையிட்டு, என் பாவத்தினிமித்தம் விசாரப்படுகிறேன்" என்று சங்கீதக்காரன் சொன்னதுபோல நானும் என் அக்கிரமங்களை அறிக்கை யிடுகிறேன் ஆண்டவரே. வீட்டிலும், பள்ளியிலும் தண்டனைக்குத் தப்புவதற்காக எத்தனையோ முறை பொய் சொல்லியிருக்கிறேன் சுவாமி. அப்பாவும், அம்மாவும் எதையாவது செய்யச் சொல்லும்போது முறுமுறுத்திருக்கிறேன். எத்தனையோ முறை அம்மாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் பொய் சொல்லிச் சமாளித்திருக்கிறேன். கெட்ட மாணவர்களோடு சேர்ந்து சக மாணவர்களைக் கேலி பண்ணியிருக்கிறேன். வீட்டுப் பாடங்களைச் சரிவரச் செய்யாமல் வகுப்பில் வந்து காப்பியடித்திருக்கிறேன். இவையெல்லாம் தவறான காரியங்கள் என்பதை உணர்ந்து அறிக்கை யிடுகிறேன்; அவற்றுக்காக வருத்தப்படுகிறேன். இனி அவ்வாறு செய்ய மாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.

என்னுடைய தவறான செயல்கள்மூலம் நான் உம்மையும் என் தாய் தந்தையரையும், என் ஆசிரியரையும் புண்படுத்தியிருக்கிறேன் என்பதை அறிகிறேன். என்னைத் தயவாய் மன்னித்தருளும். என் தாய் தந்தையரிடமும், ஆசிரியரிடமும் என் தவறுகளைக் கூறி மன்னிப்புக் கேட்கக்கூடிய மனபலத்தை எனக்குக் கொடும். சகேயுவைப்போல என் பாவங்களை விட்டு மனந்திரும்பி, பதிலுக்கு நாலத்தனையாய் நல்ல காரியங்களைச் செய்யும் மன நிலையைக் கொடுத்தருளும்.

உம்முடைய ஒரேபேறான குமாரன் கிறிஸ்து என் பாவங்களுக்காகச் சிலுவையில் மாண்டார் என்பதை நான் விசுவாசிக்கிறேன் ஆண்டவரே. அவரை என் மீட்பராக ஏற்றுக் கொள்கிறேன். என் பாவங்களை நான் அறிக்கையிட்டு அவற்றுக்காக உண்மையான வருத்தத்துடன் மன்னிப்புக் கேட்கிறேன். கிறிஸ்து எனக்காக மரித்தார் என்பதை நான் விசுவாசிக்கும்போது, இதோ ஆண்டவரே நீர் என் பாவங்களை மன்னித்து, என்னைப் புதுச் சிருஷ்டியாக்குகிறீர் என்பதை நான் நம்புகிறேன். நீர் அருளிய இந்தச் சொல்லி முடியாத ஈவுக்காக உம்மைத் தோத்தரிக்கிறேன்.

நான் பெற்ற இந்த இரட்சிப்பின் மகிழ்ச்சியை மற்றவர்களும் பெறும்படி அவர்களுக்கு இதைப் பற்றிக் கூற விரும்புகிறேன். கெட்ட குமாரனைப் போல வழி தப்பி அலையும் அவர்களும் உம்மைக் கண்டுகொள்ள உதவும்.

மறுபடியும் நான் பின்வாங்கிப் போகாமல் உம்முடைய பிள்ளையாகவே தொடர்ந்து இருக்கும்படி உமது கிருபையால் என்னைத் தாங்கி வழிநடத்தியருளும். உம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு எனக்கு நலமானதைப் போதித்தருளும். சவுலைப் பவுலாக்கி ஆசீர்வதித்த ஆண்டவரே நீரே என்னையும் தொடர்ந்து உமது அரவணைப்பில் காத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டு நன்றியுடன் ஜெபத்தை முடிக்கிறேன் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

சகேயு (லூக்கா 19:1–10)

மனப்பாட வசனம்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9).

20. ஆண்டவருக்குக் கீழ்ப்படிய உதவும்படி ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்படும் ஆபிரகாம் உம்முடைய கட்டளையை மீறாமல் தன் குமாரனாகிய ஈசாக்கைப் பலியிட முன்வந்தாரே. தங்கள் கீழ்ப்படிதலினால் எங்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கும் எத்தனையோ விசுவாசிகளுக்காக உம்மைத் துதிக்கிறேன்.

"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது" என்று சொன்னீரே. நானும் உமது மந்தையில் ஒரு குட்டி ஆடாகும்படி எனக்கு உதவும். விசுவாசத்தோடு உமக்குக் கீழ்ப்படிந்து உம்முடைய

பிள்ளையாக மாற வழிகாட்டும். உமது அரவணைப்பில் என்னைக் காத்தருளும்.

வீண் புரளியோ, பொய்ச்சாட்சியோ பேசாமல், "அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" என்ற உமது கட்டளைக் கேற்ப என்றும் நான் உண்மையையே பேசுவேன் என்று உறுதியளிக்கிறேன்.

"கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம்" என்ற வசனத்திற்கேற்ப என்னுடைய ஒவ்வொரு செய்கையிலும் உமக்குக் கீழ்ப்படிந்தவனாகவே நடக்க விரும்புகிறேன். என் பாதைக்கு வெளிச்சமாக இருக்கும் உம்முடைய வேதத்தின்படி நடந்து நானும் பாக்கியவான் என்ற பெயரைப் பெற எனக்குத் துணைபுரியும்.

ஆண்டவரே, நான் என் சிந்தனைகளிலும் உமக்குக் கீழ்ப்படிந்து உண்மையாய் உம்மைச் சேவிக்கும்படிக்கு எனக்கு உதவும். என் இருதயத்தின் எண்ணங்கள் உமது சமுகத்தில் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க வகையில் பரிசுத்தமாயிருப்பதாக.

சொல், செயல், சிந்தனை அனைத்திலும் உமக்குக் கீழ்ப்படிதலுள்ள பிள்ளையாக செம்மையான வழியில் நடக்க உதவும். மற்றவர்களுக்கு என் அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும் முன்மாதிரியாக இருக்க வழிகாட்டியருளும். மீட்பர் இயேசுவின்மூலம் ஜெபம் கேளும் தேவனே ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

ஆபிரகாம் (ஆதி. 22:1–14)

மனப்பாட வசனம்

தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது (அப். 5:29).

21. ஆண்டவருடைய வழிநடத்துதலை வேண்டும் ஜெபம்

எங்களைப் பராமரித்துக் காக்கும் கர்த்தரே,

உமது அடியானாகிய எலியா தீர்க்கதரிசி பகைவர்களுக்குப் பயந்து ஒளிந்திருந்த வேளையில் உம்முடைய மெல்லிய சத்தத்தின்மூலம் அவருக்கு வழிகாட்டிய தேவனே, உம்மைப் போற்றித் துதிக்கிறேன். ஆபிரகாமின் சேவகன், ஈசாக்குக்காக மணமகள் தேடி அலைந்தபோது, அவனுக்கு ரெபேக்காளைச் சுட்டிக் காட்டினீரே. நீர் உலக காரியங்களிலும் எங்களுக்கு வழிகாட்டுகிறீர் என்பதை அறிந்து உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

என்னுடைய ஒவ்வொரு செயலையும் உம்மை நோக்கி ஜெபித்தபின் துவங்கும் நல்ல பழக்கத்தை எனக்குக் கொடும். வீட்டிலும், பள்ளியிலும், வெளியிலும் நான் செய்ய வேண்டிய காரியங்களில் நீரே எனக்கு வழிகாட்டியாக இருந்து உதவும். என் முயற்சிகளை ஆசீர்வதித்தருளும்.

"உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" என்று சொல்லப்பட்டிருக்கிறதே. பள்ளியில் நான் பாடங்களைப் படிக்கும்போதும், கணக்குகளைச் செய்யும்போதும், விளையாடும்போதும் நீரே எனக்குத் துணையாயிரும். நான் உண்மையுடனும், விடாமுயற்சியுடனும் காரியங்களைச் செய்யும்படி வழிநடத்தியருளும். இந்தக் காரியங்களை வாய்க்கப் பண்ணும்.

நான் உம்முடைய பிள்ளையாக நடக்கும்போது, உமது பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு எனக்கு வழிகாட்டியருளும். நான் எதைச் செய்தாலும் அதை உம்முடைய நாம மகிமைக்கென்றே செய்யக்கூடிய ஞானத்தை எனக்குத்

தாரும். உமக்குப் பிரியமானவற்றையே நான் செய்ய எனக்குப் போதித்தருளும். அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் என்ற ஆவியின் கனியை நான் பெற நீரே எனக்கு உதவும்.

என்னுடைய உடன் மாணவர்களையும் நான் உம்முடைய பாதையில் நடத்தக்கூடிய வகையில் ஒரு முன்மாதிரியாக வாழ நான் முயற்சிக்கிறேன். நீரே நன்மையும், செவ்வையுமான வழியை எனக்குப் போதித்து, என் பாதைகளைச் செவ்வைப் படுத்தும்.

நீர் என்மேல் உம்முடைய கண்ணை வைத்து எனக்கு ஆலோசனை சொல்லும்படி, மீட்பர் இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறேன் ஆண்டவரே ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

எலியா (1 இரா. 19:9–16)

மனப்பாட வசனம்

கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்; உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும் (சங். 25:4).

22. நோய்வாய்ப்பட்டிருக்கும் மற்றவர்களுக்காக ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

நீர் இந்த உலகத்தில் எங்களுக்காக வந்திருந்தபோது இராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய சிறு பையனைக் குணப்படுத்தியதை நினைவுகூருகிறேன். இன்னும் எத்தனையோ பேர் சகலவித நோய்களும் நீங்கிச் சுகமடைந்தார்கள். இன்றும் உம்முடைய சுகமளிக்கும் கரம்

எங்களைத் தாங்கி வழிநடத்தி வருவதற்காக உமக்கு நன்றி ஆண்டவரே! ஆயிரமாயிரம் சிறுவர்களை உமது அன்பின் அரவணைப்புக்குள் வைத்துக் காப்பாற்றி வருவதற்காக உமக்கு தோத்திரம் கர்த்தரே!

* இன்று நான் என் பள்ளியில் படிக்கும் / என் அண்டை வீட்டிலிருக்கும் ... க்காய் உம்மிடம் கெஞ்சி மன்றாடுகிறேன் ஐயா. அவன் ... நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறான். நீர் பேதுருவின் வீட்டுக்குச் சென்று அவர் மாமியைக் குணப்படுத்தியதுபோல இன்றே, இப்போதே அவன் வீட்டிற்குச் சென்று உமது வல்லமையால் அவனைக் குணப்படுத்தியருளும் ஐயா. அவன் அம்மாவும், அப்பாவும் அவனைக் கவனிப்பதற்கேற்ற பலத்தையும், பொறுமையும் பெற உதவும் ஆண்டவரே. படுக்கையில் இருக்கும் அவனையும் நீர் கண்காணித்து வருகிறீர் என்பதை அவன் உணர்ந்து, மகிழ்ச்சியோடு சகித்துகொள்ளும்படி உதவும் ஐயா.

* இன்னும் நோய்வாய்ப்பட்டிருக்கும் மற்றவர்களுக்கும் என்னால் முடிந்த உதவியை நான் செய்யும்படி எனக்கு

வழிகாட்டியருளும் தேவனே. சீரிய ராஜாவின் படைத் தலைவன் நாகமானின் குஷ்டரோகம் நீங்க அவனை எலிசா தீர்க்கதரிசியிடம் வழிகாட்டிய அந்தச் சிறு பெண்ணைப்போல நானும் மற்றவர்கள் சரியான ஆலோசனை பெற உதவுமாறு என்னை வழிநடத்தியருளும்.

சரியான கவனிப்பின்றி அவதிப்படும் அநேகரை நினைக்கின்றேன் ஐயா. அவர்களுக்கு நீரே

உறுதுணையாயிருந்து காப்பாற்றியருளும். மருத்துவமனைகளிலும், வீடுகளிலும் சிகிச்சையளித்து வரும் மருத்துவர்களையும், அவர்களின் உதவியாளர்களையும் உமது பாதத்தில் வைக்கிறேன். அவர்கள் ஞானத்தோடும், அன்பான உள்ளத்தோடும் தங்கள் பணியைச் செய்ய அவர்களை வழிநடத்தியருளும். "நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்" என்ற வேத வசனத்திற்கேற்ப வீடுகளிலும், மருத்துவ மனைகளிலும் உள்ள நோயாளிகளுக்கு ஆறுதலளிக்கும் ஊழியத்தைச் செய்யும் அனைவரையும் ஆசீர்வதித்தருளும். நானும் என்னால் முடிந்தவரை இந்தப் பணியைச் செய்ய உறுதியளிக்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக நோய் வராமல் தடுக்கக்கூடிய நல்ல பழக்க வழக்கங்களையும், உடல்நலப் பராமரிப்பையும் நான் பழகிக்கொள்ள உதவும். மற்றவர்களுக்கும் நான் இவற்றை எடுத்துச் சொல்லத் துணைபுரியும் ஆண்டவரே.

மீண்டும் ஒருமுறை எங்களை உமது கண்ணின் கருமணிகளைப் போலக் காத்து வருவதற்காக நன்றி கூறி ஜெபத்தை முடிக்கிறேன் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

யோவான் **4:46-53**

மனப்பாட வசனம்

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் (யாக்.5:15).

23. மற்றவர்களிடம் கருணை காட்ட உதவும்படி ஜெபம்

கிருபை மிகுந்த ஆண்டவரே,

நல்ல சமாரியன் கதையின்மூலம் கருணை காட்டுவதின் அவசியத்தை வலியுறுத்திய தேவனே, உமக்கு நன்றி. என்மீதும்

என்னைப் போன்ற எத்தனையோ சிறுவர்கள்மீதும் அன்புகாட்டி அரவணைத்து வரும் ஆண்டவரே, உமக்கு தோத்திரம் ஐயா.

நானும் என்னுடைய செயல்கள்மூலம் மற்றவர்களுக்குக் கருணை காட்ட எனக்கு உதவும். யோனத்தானின் குமாரனாகிய மேவிபோசேத்துக்குக் கருணை காட்டிய தாவீதைப்போல பலவீனரைத் தாங்கும் இருதயத்தை எனக்குக் கொடும். இயலாத நிலையிலுள்ள முதியவர்களுக்கு நான் உதவி செய்யவும், பாடம் விளங்காமல் கஷ்டப்படும் மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கவும், வியாதியிலிருப்பவர்களை ஆற்றித் தேற்றவும் உதவும்.

நான் என்னிடத்தில் அன்புகூருவதுபோல, பிறரிடத்திலும் அன்புகூரத்தக்க உள்ளத்தை எனக்குக் கொடுத்தருளும்.

நான் என்னுடைய செயல்கள்மூலம் கருணை காட்டுவது மட்டுமின்றி, எனக்கிருப்பதைப் பகிர்ந்து கொடுப்பதின்மூலம் எனது அன்பை வெளிப்படுத்த உதவும். மற்றவர்களுக்குக் கொடுத்து அதனால் மகிழ்ச்சியடைந்த தொற்காளை நான் முன் மாதிரியாகக் கொள்ளும்படி துணைபுரியும். "வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்" என்று சொல்லப் பட்டிருக்கிறதே. நான் நன்மை செய்யவும் தான தர்மம் பண்ணவும் மறவாதிருக்க எனக்கு உதவும். ஏனெனில் நீர் இவற்றின்மீது பிரியமாயிருக்கிறீர்.

அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யும் நற்குணத்தை எனக்குத் தந்தருள வேண்டுமென்று இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறேன் தேவனே ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

நல்ல சமாரியன் (லூக்கா 10:30–37)

மனப்பாட வசனம்

நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல, நீங்களும் ஒருவரிலொருவர்

அன்பாயிருங்கள் என்கிற புதிய கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன் (யோவான் 13:34).

24. பாதுகாப்பை வேண்டும் ஜெபம்

அன்புள்ள தேவனே,

எலிசா தீர்க்கதரிசியைப் பிடிக்க சீரிய ராஜா பலத்த சேனையை அனுப்பி பட்டணத்தை வளைந்து கொண்டபோது, நீர் அக்கினிமயமான குதிரைகளையும், இரதங்களையும் அனுப்பிப் பாதுகாத்தீரே, உமக்கு நன்றி ஆண்டவரே. காற்றையும் கடலையும் அதட்டி படகிலிருந்த சீடர்களைக் காப்பாற்றியதுபோல இன்றும் கோடானுகோடி மக்களைப் பராமரித்து வருகிறீரே, உமக்கு தோத்திரம் ஐயா.

''ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன்'' என்ற உறுதியை அளித்திருக்கும் தேவனே, என்னோடிரும். என் உள்ளத்தில் ஏற்படும் வீண் பயங்களை அகற்றியருளும். ''கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன்'' என்று நானும் கூறும்படி எனக்கு உதவும்.

வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி லிருந்து ஒத்தாசை வரும் என்பதுபோல, எண்ணற்ற மக்களையும் கஷ்ட, நஷ்டங்களிலிருந்து காப்பாற்றியருளும். திருடர்களாலோ கெட்டவர்களாலோ எந்தவித துன்பமும் நேரிடாதபடி அவர்களைத் தாங்கியருளும். நெருப்பினாலோ, வெள்ளத்தி னாலோ பாதிப்பின்றி அனைவரையும் காத்தருளும்.

''நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்'' என்று தானியேலின் புத்தகத்தில் அந்த மூன்று யூத வாலிபர்களும் திட விசுவாசத்தோடு அறிக்கையிட்டதுபோல, நானும் மன பலத்தோடு மற்றவர்களிடம் உம்மை அறிக்கை செய்ய எனக்கு

உதவும். பள்ளியில் படிக்கும் மாணவர்கள் மத்தியிலும், நண்பர்கள் கூட்டத்திலும் உமக்காக உறுதியோடு நிற்கத்தக்கதான பலத்தை எனக்கு அளித்தருளும்.

இன்னும் எத்தனையோ மலைப் பகுதிகளிலும், அபாயகரமான மக்களிடையேயும், விரோதமான கொள்கைகளுக்கு மத்தியிலும் உம்முடைய பணியைச் செய்துவரும் அருட்பணியாளர்களை நினைக்கிறேன் ஐயா. அவர்களுக்குச் சரீரப் பிரகாரமாகவோ, ஆவிக்குரிய பிரகாரமாகவோ, எந்தவிதத் தீங்கும் நேரிடாமல் காப்பாற்றியருளும். நீரே அவர்களுக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமாயிரும்.

எங்கள் அருமை இரட்சகராகிய இயேசுவின் மூலம் கேளும் தேவனே ஆமென்.

வேதவாசிப்பு பகுதி

எலிசா தீர்க்கதரிசி (2 இரா. 6:8–23)

மனப்பாட வசனம்

தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அநுகூலமான துணையுமானவர் (சங். 46:1).

25. மற்றவர்களுக்குக் கிறிஸ்துவைப் பற்றிக் கூற உதவும்படி வேண்டும் ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே,

எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்கு உம்மைப் பற்றிக்கூறிய பிலிப்புவைப் போன்று எத்தனையோ ஊழியர்கள் காலம் காலமாக நற்செய்திப் பணி புரிந்து வருவதற்காக உமக்கு நன்றி ஆண்டவரே. அவர்கள் மூலமாக நானும் உம்மைத் தெரிந்துகொள்ளும் பாக்கியத்தைப் பெற்றதற்காக உம்மைத் துதிக்கிறேன்.

அவர்களைப் போலவே நானும் உம்மைப்பற்றி மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி வாஞ்சிக்கிறேன். வேத வாசிப்பின் மூலமும், ஓய்வுநாள் பள்ளியின் மூலமாகவும் உம்மைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

உம்மைப் பற்றி நான் அறிந்துகொண்டவற்றை நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும் கூச்சமின்றி எடுத்துக்கூற நீரே என்னைப் பலப்படுத்தியருளும். அவர்களும் உம்மை ஏற்றுக் கொள்ளும்படி அவர்கள் மனதில் கிரியை செய்தருளும். அந்திரேயா தன் சகோதரனாகிய பேதுருவை உம்மிடம் அழைத்து வந்ததுபோல, நானும் மற்றவர்களை ஓய்வுநாள் பள்ளிக்கு அழைத்துவர நீரே எனக்கு உதவும்.

"உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்ற பேதுரு அப்போஸ்தலனின் ஆலோசனை எனக்கு வழிகாட்டட்டும். மற்றவர்கள் நான் நடந்துகொள்ளும் விதத்தைக் கண்டு அதன்மூலம் உம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளும்படி கிருபையாய் எனக்கு உதவும்.

மற்றும் இந்த ஊழியத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்காகவும் உம்மை நோக்கி மன்றாடுகிறோம். மூப்பர்களும், ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்களும் போதகர்களும் உற்சாகத்துடன் உமது பணியைச் செய்ய நீரே அவர்களைத் தாங்கி வழிநடத்தியருளும். தூரமான இடங்களில் அருட்பணியாளர்களாகச் சென்றிருப்பவர்கள் புதிய சூழ்நிலைக்கேற்பத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள உதவும். உம்மை அறிவிக்கும் நோக்கத்தோடு அவர்கள் புதிய மொழிகளைக் கற்கும்போது நீரே அவர்களது முயற்சிகளை வாய்க்கப்பண்ணும். அவர்கள் ஊழியம் அதிக பலன் தரவும், உலகமெங்கும் எழுப்புதல் பரவவும் கிருபை புரிந்தருளும் தேவனே. ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

பிலிப்பும் எத்தியோப்பிய மந்திரியும் (அப். 8:26–40)

மனப்பாட வசனம்

மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன் (மத். 10:32).

26. தேவைகளுக்காக வேண்டும் ஜெபம்

எங்களைப் பராமரித்துவரும் பராபரனே,

காகத்தின்மூலம் உமது அடியான் எலியாவைப் போஷித்த ஆண்டவரே, உம்மைத் தோத்தரிக்கிறேன். ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உணவளித்த தேவனே, உமது கரிசனையையும், கிருபையையும் நினைத்து உம்மைத் துதிக்கிறேன். எலிசா தீர்க்கதரிசியின் மூலம் ஏழை விதவையின் குறைவை நிறைவாக்கிய உம்மை நன்றியறிதலோடு போற்றி வணங்குகிறேன்.

அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்கு அளித்துப் பராமரித்து வருவதற்காக நன்றி தேவனே. நீர் உம்முடைய ஐசுவரியத்தின்படி எங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவீர் என்ற நம்பிக்கையோடு உம்மைத் துதிக்கிறேன்.

* இப்பொழுது என்னுடைய நண்பனுடைய வீட்டின் தேவைகளை நீரே சந்தித்தருளும். அவனுடைய அப்பாவுக்கு உடல்நலமில்லாத காரணத்தினால் அவர்கள் வீட்டின் வருமானம் குறைந்து போய்விட்டது. போதிய உணவின்றி அவதிப்படுகிறார்கள். அவனுடைய அப்பாவுக்கும் போதிய உடல்

* இந்தப் பகுதிக்குப் பதிலாக உங்கள் குறிப்பிட்ட தேவைகளைத் தெளிவாகக் கூறலாம்.

நலத்தை அருளும்படி வேண்டிக் கொள்கிறேன் ஆண்டவரே. நீரே அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து அவர்களை ஆற்றித் தேற்றியருளும். அன்றன்றுள்ள ஆகாரத்தைக் கிருபையாய் அவர்களுக்கு அளித்தருளும்.

உலகப்பிரகாரமான தேவைகளுக்காக நான் கவலைப் படும்போது, நீரே ஜீவ அப்பம் என்பதை நான் மறந்துவிடா திருக்கத் துணைபுரியும். வானத்து மன்னாவாகிய உம்மை ஏற்றுக்கொண்டு, மற்றவர்களும் நீர் நல்லவர் என்பதை ருசித்துப் பார்க்கும்படி அவர்களுக்கும் உம்மைப் பற்றிக் கூறத்தக்க வாய்ப்பையும், ஞானத்தையும் எனக்குத் தந்தருளும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நான் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் உம்முடைய மகிமைக்கென்றே செய்யத்தக்க அறிவை எனக்குத் தந்து, வழிகாட்டியருளும்.

மேய்ப்பர் இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும் பிதாவே, ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

எலியாவும் காகங்களும் **(1 இரா. 17:1–16)**

மனப்பாட வசனம்

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் **(பிலி. 4:19).**

27. புத்தாண்டு ஜெபம்

கண்மணிபோலக் காக்கும் கர்த்தரே,

கடந்த ஆண்டு முழுவதும் எங்களை நலத்தோடும், பாதுகாப்போடும் பராமரித்து இந்தப் புதிய ஆண்டைக் காணக்

கிருபை அளித்தீரே. உம்மைப் போற்றி வணங்குகிறேன். உமது செட்டைகளின்கீழ் காத்து, வழிநடத்தி வந்தமைக்காக உமக்கு என் தோத்திரங்களை ஏறெடுக்கிறேன்.

வரும் ஆண்டு முழுவதும் என்ன நடக்கவிருக்கிறது என்பதை நீர் அறிவீர். பிரச்சினைகளோ, துயரங்களோ, புயலோ வெள்ளமோ உமது சித்தத்துக்கு விரோதமாக எதுவும் என்னை அணுகாது என்பதை நான் விசுவாசிக்கிறேன். நீர் என்னைவிட்டு விலகுவதுமில்லை, என்னைக் கைவிடுவது மில்லை என்ற நம்பிக்கையோடு நான் இந்தப் புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறேன்.

என்னுடைய படிப்பை ஆசீர்வதியும் சுவாமி. இந்த ஆண்டும் நான் நன்றாகப் படித்துத் தேறி மேல் வகுப்புக்குச் செல்லக் கிருபையளிக்குமாறு வேண்டுகிறேன். அப்பாவின் வேலையையும், அம்மாவின் பணிகளையும் ஆசீர்வதியும். உடல் நலத்துடன் எங்களைக் காத்துக்கொள்ளும்.

நான் உம்முடைய பிள்ளையாக நடந்து, மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க உதவும். அவர்களுக்கு உம்மைப் பற்றிக் கூறும் வாஞ்சையைக் கொடுத்தருளும்.

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் நீர் என்னைக் காப்பாற்றி வழிநடத்துவீர் என்ற விசுவாசத்தோடு நன்றிகூறி ஜெபத்தை முடிக்கிறேன். இயேசுவே துணையாயிரும், ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

சங்கீதம் **91**

மனப்பாட வசனம்

தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக்கா 1:37).

28. பெரிய வெள்ளி ஜெபம்

எங்களைக் காத்து இரட்சிக்கும் தேவனே,

எங்களுடைய பாவங்களுக்காக உம்முடைய ஒரே பேறான குமாரனைச் சிலுவையில் மரிக்கும்படி விட்டுக் கொடுத்தீரே, எங்கள்மீது நீர் வைத்துள்ள அளவற்ற அன்புக்காக உம்மைப் போற்றித் துதிக்கிறேன். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் எங்களுக்கு பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும், மோட்ச பாக்கியத்தையும் அளித்த உமக்கு நன்றிகூறி தோத்திரம் செலுத்துகிறேன்.

இதோ சிலுவையில் மீட்பர் இயேசு அனுபவித்த வேதனை களையும், பெற்ற மரணத்தையும் நினைத்துப் பார்க்கிறேன். நான் தவறான செயல்களைச் செய்ய முற்படும்போதெல்லாம், உமது சிலுவைப் பாடுகளைத் தியானித்து, தீய செயல் களிலிருந்து விடுபடும்படி நீரே எனக்குத் தயவாய் உதவும்.

உமது சிலுவை மரணத் தின்மூலம் நீர் எங்களுக்காகச் சம்பாதித்த மீட்பை நானும் பெற்றுக்கொள்ள என்னை ஏவியருளும். என் அக்கிரமங் களை நான் அறிக்கையிட்டு, என் பாவங்களுக்காக வருத்தப்பட்டு, நீர் என்னுடைய பாவங்களுக்காகச் சிலுவை யில் மரித்தீர் என்பதை விசுவா சித்து, மீட்பைப் பெற்றுக் கொள்ளுமாறு என்னை வழிநடத்தும்.

உம்முடைய சிலுவை மரணத்தை நினைவுகூரும் இந்நாளில், நான் பெற்ற இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனைவருக்கும் அறிவிப்பதே என் பணி என்று அறிக்கை யிடுகிறேன். என்னுடைய சாட்சிபகருதலை ஆசீர்வதித்தருளும். சாட்சி கூறுவதற்கேற்ப நான் முன்மாதிரியாக நடக்கவும் எனக்குத் துணைபுரியும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதின் மூலம் அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சையோடு இந்த ஜெபத்தை முடிக்கிறேன் தேவனே, ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

சிலுவையில் இயேசு (லூக்கா 23:33–47)

மனப்பாட வசனம்

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:9).

29. ஈஸ்டர் ஜெபம்

எங்கள் நித்திய பிதாவே,

இந்த மகிழ்ச்சியான நன்னாளை மீண்டும் ஒருமுறை நண்பர்கள், உறவினர்கள் இவர்களோடு கொண்டாட எனக்களித்த கிருபைக்காக ஆண்டவரே, உமக்கு தோத்திரம். புத்தாடை, பலகாரங்கள், சுவையான உணவு இவற்றிற்காக நன்றியைக் கூறுகிறேன்.

இன்று மீட்பர் இயேசுவின் உயிர்த்தெழுந்த திருநாள். உமது ஒரே பேறான குமாரனாகிய அவரை எங்களுக்காக இந்த

உலகத்தில் அனுப்பினீர். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறார். நாங்கள் செல்ல வேண்டிய வழியில் அவர் நடந்து காட்டினார்; நாங்கள் பின்பற்ற வேண்டிய சத்தியங்களை எடுத்துக் கூறினார்; இறுதியில் எங்களுடைய பாவங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தி, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிரோடெழுந்தார்; அவரை விசுவாசிக்கும் எங்கள் ஜீவன் நஷ்டப்பட்டு விடாதபடி காப்பாற்றுகிறார். வழிகாட்டிய அவரே இன்று நாங்கள் நித்திய ஜீவன் பெற ஒரே வழி! சத்தியங்களைப் போதித்த அவரே பாவத்திலிருந்து விடுவிக்கும் ஒரே சத்தியம்! எங்களுக்காக மரித்து, உயிர்த்த அவரே நித்திய ஜீவனை உறுதிப்படுத்தி, பாவத்தில் மரித்த எங்களுக்கு ஜீவனைக் கொடுத்திருக்கிறார்.

எங்கள் விசுவாசத்தை பலப்படுத்தி, பரலோக பாக்கியத்தை நிச்சயப்படுத்தும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்காக என் முழு உள்ளத்தோடு ஸ்தோத்திரம் செலுத்தி, ஜெபத்தை முடிக்கிறேன் ஆண்டவரே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

உயிர்த்தெழுந்த இயேசு (யோவான் 20:1–10)

மனப்பாட வசனம்

கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள் (1 கொரி. 15:17).

30. கிறிஸ்மஸ் ஜெபம்

அன்பான ஆண்டவரே,

நீர் எங்கள்மேல் வைத்த உமது அன்பால் உமது ஒரே பேறான குமாரன் கிறிஸ்துவையே எங்களுக்காக அனுப்பி வைத்தீரே. அவருடைய பிறந்த நாளைக் கொண்டாடும்

வேளையில் உமது அளவற்ற அன்பை நினைத்து உம்மைத் துதிக்கிறோம், போற்றுகிறோம், உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

இந்த மகிழ்ச்சியான நன்னாளில் அன்புடன் என்னைப் பராமரித்து வரும் அன்பு அம்மா, அப்பாவுக்காக உமக்கு நன்றி ஐயா. புதிய ஆடைகளுக்காகவும், பரிசுப் பொருள்களுக்காகவும் தோத்திரம். அன்பானவர்களோடு சேர்ந்து சுவையான உணவை உண்ண, ஆலயத்துக்குச் செல்ல, பாடி மகிழ கிருபை அளித்தமைக்காக நன்றி ஐயா.

நீர் இரவின் குளிரில் மாட்டுத் தொட்டிலில் பிறந்ததை நான் நினைவுகூர்கிறேன். இந்தக் குளிர்கால இரவில் உண்ணப் போதுமான உணவின்றி, குளிரைப் போக்கப் போதிய உடையின்றி அவதிப்படும் எண்ணற்றோரை நான் மறவாதிருக்க எனக்குத் துணைபுரியும். எனக்குள்ளவற்றை, என் பரிசுப் பொருள்களை அவர்களுடன் பகிர்ந்துகொள்ளத்தக்க மன விருப்பத்தையும், வாய்ப்பையும் எனக்குத் தாரும். நீரோ இன்று உம்முடைய ஒரே பேறான குமாரனை எங்களுக்காகத் தானமாக அளித்தீர். அதை நினைவுகூரும்போது, எங்கள் உள்ளத்திலும் கருணை மலர்கள் மலரக் கிருபை செய்யும்.

அன்று மாட்டுத் தொழுவத்தில் உம்மைப் பார்க்க ஓடோடி வந்த மேய்ப்பர்கள், உம்மைக் கண்டு மகிழ்ச்சியடைந்ததோடு மட்டுமின்றி, திரும்பிச் சென்று மற்றவர்களுக்கும் இந்த நற்செய்தியை அறிவித்தார்கள். ஆண்டவரே நானும் உம்மை என் மீட்பராகக் கண்டுகொண்டேன்; அளவற்ற மகிழ்ச்சி பெற்றேன்; இந்த மீட்பின் நற்செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்கும்படி நீரே எனக்கு வழிகாட்டியருளும்.

கிறிஸ்மஸ் என்றாலே புத்தாடை, கிறிஸ்மஸ் மரம், வாழ்த்து அட்டைகள், பட்டாசுகள், சுவையான

உணவு, கிறிஸ்மஸ் பாடல்கள் என்பவைதான் என்று நினைத்துவிடாமல், இவை எல்லாவற்றையும்விட உமது கொடுக்கும் அன்பையே நாங்கள் நினைவுகூர உதவும். அந்த அன்பை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதையும் உணர்ந்து கொள்ளும்படி உறுதுணையாயிரும் தேவனே, ஆமென்.

வேதவாசிப்புப் பகுதி

மேய்ப்பர்கள் இயேசுவைக் காணுதல் (லூக்கா 2:8–17)

மனப்பாட வசனம்

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் (யோவான் 3:16).

31. பிறந்தநாள் ஜெபம்

என்னை அரவணைத்துக் காப்பாற்றும் கர்த்தரே,

இன்று என்னுடைய பிறந்த நாளை மகிழ்ச்சியாகக் கொண்டாடக் கிருபையளித்த உம்மைப் போற்றித் துதிக்கிறேன். என்னுடைய வாழ்நாளில் இன்னுமொரு ஆண்டைக் கூட்டிக் கொடுத்தமைக்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன்.

கடந்த ஆண்டு முழுவதும் என்னை ஆசீர்வதித்துக் காப்பாற்றி வந்த உம்மை நான் துதிக்கிறேன். இந்த ஆண்டிலும் என்னை விட்டு விலகாமல் எனக்கு உறுதுணையாயிரும். நான் உம்மைப் பற்றிய அறிவிலும், நல்ல நடத்தையிலும், விசுவாசமுள்ள வாழ்க்கையிலும் மேலும் வளர்ச்சிபெற உதவும்.

சரீரப்பிரகாரமாக எனக்கு உடல் நலத்தையும் வளர்ச்சியையும் கொடுத்துள்ளமைக்காக நன்றி. இந்த

ஆண்டிலும் என் சரீர நலனைப் பாதுகாத்தருளும். கடந்த ஆண்டில் என் படிப்பை ஆசீர்வதித்ததுபோல, இந்த ஆண்டிலும் சிறப்பாகப் படித்து, நற்பெயரைப் பெற போதிய அறிவை எனக்குக் கொடுத்தருளும்.

என் வயது அதிகரிக்க, அதிகரிக்க நான் மற்றவர்களுக்கு இன்னும் அதிகமாகப் பயனுள்ளவனாக விளக்கும் வகையில் என்னை வழிநடத்தியருளும். என்னைப் பராமரித்து வரும் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் நன்றியும், உண்மையும் உள்ளவனாக, நன்றாகப் படித்து வாழ்க்கையில் முன்னேற உதவும். அவர்களுடைய வயோதிப காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவது என் கடமை. அதற்காக நான் என் வருடங்களை வீணாக்கிவிடாமல் விடாமுயற்சியோடு முன்னேறத் துணை புரியும்.

இன்று எனக்குக் கிடைத்துள்ள வெகுமதிகளுக்காக நன்றி தேவனே. அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளும் அன்பை எனக்குத் தாரும்.

பிறந்த நாளைக் கொண்டாடும் இந்நாளில் நான் உமக்குள் மறுபடியும் பிறந்தவனாக, உம்முடைய பிள்ளையாக நடக்க மறுபடியுமாக என்னை ஒப்புக்கொடுக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஜெபம் கேளும் தேவனே, ஆமென்.

வேத வாசிப்புப் பகுதி

மறுபிறப்பு (யோவான் 3:1–16)

மனப்பாட வசனம்

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் (யோவான் 3:3).

குட்டிப்புலி வெளியீடு

மோட்சப் பயணம்

சிறுவர் பதிப்பு

பதிப்பாசிரியர்: எச்.பி. ராஜ்குமார்

கிறிஸ்தியான் மனம்திரும்பி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் ஒரு கிறிஸ்தவன். அவன் மோட்சத்தை நோக்கிப் பயணம் செய்கிறான். வழியில் அவன் சந்திக்கும் சோதனைகளும், அனுபவிக்கும் வேதனைகளும் எத்தனை எத்தனை!

☐ சேற்றில் சிக்கிக் கொள்கிறான்!

☐ வழிதப்பி விடுகிறான்!

☐ சிங்கங்களிடையே செல்கிறான்!

☐ பிசாசோடு சண்டை போடுகிறான்!

☐ சிறையில் அடைக்கப் படுகிறான்!

☐ அரக்கனிடம் பிடிபடு கிறான்!

☐ வலையில் சிக்கிக் கொள்கிறான்!

☐ நீரில் மூழ்கித் தத்தளிக்கிறான்!

என்றாலும்கூட திடவிசுவாசத்தோடு முன்னேறிச் சென்று அவன் மோட்சத்தை அடையும்போது நாமும் அவனோடு சேர்ந்து ஆண்டவரைத் துதிக்கிறோம்!

நம்மைப் பலப்படுத்தி மோட்ச பாதையில் நடக்க வழிகாட்டும் அற்புதமான நூல்! சிறுவர் / இளம் வாலிபருக்கு ஏற்ற வகையில் படங்கள் நிறைந்த வெளியீடு!

விலை ரூ.9–00

நற்செய்திக் கதை நூல்வரிசை
சிறுவர் / இளம் வாலிபர்

அன்புமலர் வெளியீடு

துப்பாக்கி முனையில் வேதாகமங்கள்

எச்.பி. ராஜ்குமார்

உலகில் பல நாடுகளில் கிறிஸ்தவர்கள், சந்திக்கும் சோதனைகள் கொஞ்சநஞ்சமல்ல. சில நாடுகளில் வேதாகமம் கொண்டு செல்வதுகூடத் தடை செய்யப்பட்டுள்ளது!

இந்நிலையில் — துப்பாக்கி முனைகளுக்கும் அஞ்சாமல் கிறிஸ்து அருளும் மனபலத்தோடு — அனைத்து நாடுகளுக்குள்ளும் வேதாகமங்களைக் கொண்டு சென்று விநியோகிக்கிறார் சகோதரன் ஆண்ட்ரூ.

எத்தனையோ அபாயகரமான சூழ்நிலைகளில் கிறிஸ்து அவரை எவ்வாறு காப்பாற்றி வழிநடத்துகிறார் என்பதை நாம் படிக்கும்போது நமது விசுவாசம் பலப்படுகிறது!

நாமும் கிறிஸ்துவுக்காகத் துணிவுடன் செயலாற்றத் தூண்டப்படுகிறோம்!

விலை ரூ.8–00 அருட்பணி தீரச்செயல் வரிசை

சிறுவர் / இளம் வாலிபர் / வாலிபர்

சின்னக்குட்டியின்

ஜெபம்

சிறுவருக்கான 31 ஜெபங்கள்

(வேத வாசிப்பு, மனப்பாட வசனம் இவற்றுடன்)

ஜெபம் என்றால் என்ன?, ஜெபத்தின் வகைகள், ஏன் ஜெபிக்க வேண்டும்?, எப்படி ஜெபிக்க வேண்டும்? மற்றும் தனி ஜெபம் பற்றிய செய்திகளோடு—

சிறுவருக்கான 31 பயனுள்ள ஜெபங்கள்!

சிறுவர் மட்டுமின்றி இளம் வாலிபர்களும், வாலிபர்களும்கூட இந்த ஜெபங்களைப் பயன்படுத்தலாம். ஒவ்வொரு ஜெபத்தோடும் பொருத்தமான வேத வாசிப்புப் பகுதி மற்றும் மனப்பாட வசனமும் கொடுக்கப்பட்டிருப்பதால் தியானமாகவும் பயன்படுத்தலாம். ஓய்வுநாள் பள்ளிகள், சிறுவர் இல்லங்களுக்கும் பயனுள்ள நூல்!

விலை ரூ. 8–50

குட்டிப்புலி வெளியீடு
சிறுவர் / இளம் வாலிபர் / வாலிபர்